Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 38 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி எண் 49

குறைந்த செலவில்
சிறந்த சலவைக்கு
மில்க் வைற் சோப்


மில்க் வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்

மலர் 7 யாழ்ப்பாணம் குரோதி மாசி 7 ஆம் நாள் ஷவ்வால் பிறை 15 (18-2 65) வியாழக்கிழமை இதழ் 10

# உண்ணாவிரதத்தை வினோபா முடித்தார்

## நிலைமை சீர்திருந்தியது குறித்து மகிழ்ச்சி

### ஆங்கிலம் துணைமொழியாக நீடிக்கும் என ஜனாதிபதி அறிவிப்பு

வார்தா, பெப். 17

கடந்த வெள்ளிக்கிழமை முதல் 6 தினங்களாக உண்ணாவிரதம் இருந்த ஆச்சார்யா வினோபாபாவே தமது உண்ணாவிரதத்தை இன்று பகல் 12 மணிக்கு முடித்துக்கொண்டு விட்டார்.

வன்முறை ஆர்ப்பாட்டங்கள் நின்றுவிட்டதாலும் நாட்டின் நிலைமை தெளிவாக அபிவிருத்தியடைந்து விட்டதாலும் உண்ணாவிரதத்தை முடித்துக் கொள்வதாக வினோபா தெரிவித்தார்.

தமது 3 அம்சத்திட்டத்தை சகலரும் ஏற்றுக்கொண்டது குறித்தும், ராஜினாமாச்செய்த சுப்பிரமணியம், அழகேசன் ஆகிய மந்திரிகள் ராஜினாமாவை வாபஸ்பெற்றது குறித்தும் ஆச்சார்ய மகிழ்ச்சி தெரிவித்தார்.

இதற்கிடையில் இன்று பார்லிமெண்டின் கலைப்புக்கூட்டத்தில் ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் உரைநிகழ்த்துகையில், மொழிப் பிரச்னைபற்றி அரசாங்கத்தின் உறுதிமொழி முழுவதும் நிறைவேற்றப்படும் என அறிவித்தார்.

"காலஞ்சென்ற நேரு அளித்த உறுதிமொழியும் திரு சாஸ்திரி அதை மீண்டும் கூறியதும் முற்றாக நிறைவேற்றப்படும் என திட்டவட்டமாக நான் அறிவிக்கிறேன்" என டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினர்.

ஹிந்தி, நாட்டின் உத்தியோக மொழியாய் இருப்பதுடன் ஹிந்தி பேசாத மக்கள் விரும்பும்வரை ஆங்கிலம் துணை உத்தியோக மொழியாய் விளங்குமென்றும் இது பலரது அச்சத்தைப் போக்குமென்றும் ஜனாதிபதி தெரிவித்தார். முதன்மந்திரிகள் இது பற்றிக்கூடி ஆராய்வார்கள் என்றும் கூறிய ஜனாதிபதி ஹிந்தி எதிர்ப்பின்போது ஏற்பட்ட உயிர்ச்சேதத்திற்கு அநுதாபம் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் உரையைக் கேட்டபின் அங்கத்தினர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள்.

## 4 வழக்கறிஞர்களுக்கு சிங்களம் தெரியவில்லை

### 5-வது வழக்கறிஞர் எதிரியின் உதவிக்கு வந்தார்

யாழ்ப்பாணம், வியாழன்

சிங்கள மொழி பேசுபவரான எதிரியொருவர் தமக்கு, அரசாங்கத்தால் ஒருவழக்கறிஞரை நியமிக்கும்படி கேட்டபொழுது, முடிக்குரிய வழக்கறிஞர் திரு. ஜி. பி. எஸ். டி. சில்வா, அடுத்தடுத்து மூன்று வழக்கறிஞர்களின் பெயர்களை குறிப்பிட்ட பொழுது, ஒவ்வொருவரும் எழுந்து தங்களுக்குச் சிங்களம் தெரியாது என்று கூறிய சம்பவம்நேற்று வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நிகழ்ந்தது.

சிங்கள மொழி பேசுபவரான எதிரி தான் தனக்காக வழக்கறிஞர் எவரையும் ஏற்படுத்தவில்லையென்றும், அரசாங்கம் சார்பில் தனக்கு வழக்கறிஞர் ஒருவரை ஏற்படுத்தித் தரும்படியும்கேட்டார். இதைத் தொடர்ந்து, முடிக்குரிய வழக்கறிஞர் திரு சில்வா எழுந்து திரு. பலகுமாரின் பெயரைக் குறிப்பிட்ட பொழுது, அவர் தமக்கு சிங்களம் தெரியாது எனக் கூறினர். அதன் பின் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. ரி. யோகநாதனின் பெயரைக் குறிப்பிட்ட பொழுது அவரும் எழுந்து தமக்குச்சிங்களம் தெரியாதெனக்கூறினர். அதன்பின் முடிக்குரிய வழக்கறிஞர் குமரகுருவின் பெயரைக் கூறிய பொழுது அவரும் எழுந்து தமக்குச்சிங்களம் தெரியாது எனக்கூறினர். அதன் பின் முடிக்குரிய வழக்கறிஞர் திரு நடராசாவின் பெயரைக் கூறினர். திரு. நடராசா எழுந்து தமக்கும் சிங்களம் தெரியாதென்றும், திரு. சோமகந்தருக்கு நன்கு சிங்களம் தெரியுமென்றும்தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து முடிக்குரிய வழக்கறிஞர், திரு. சோமஸ்கந்தரின் பெயரைக் குறிப்பிட்ட பொழுது, திரு. சோமஸ்கந்த எழுந்து சம்மதம் தெரிவித்தார்.

**மற்றொரு வழக்கு**

மற்றொரு வழக்கில சிங்கள மொழி பேசும் எதிரி தமக்கு அரசாங்கத்தால் ஒரு வழக்கறிஞரை நியமித்துத் தரும்படி கேட்டார்.

நீதியரசர் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராசா, இங்கு வேறு எவருக்கும் சிங்கள மொழிதெரியாதா? என்று கேட்ட பொழுது வழக்கறிஞர்கள் எல்லோரும் அமையாக இருந்தனர். இதன்பின் அவ்வழக்கிற்கும் எதிரிக்காக வாதாட திரு. சோமஸ்கந்தர் அரசாங்கத்தின் சார்பில் நியமிக்கப்பட்டார்.

## வடக்கிலும் தெற்கிலும் 2 பல்கலைக் கழகங்கள்

### கல்வி மந்திரி சிபார்சு

கொழும்பு. புதன்

வடக்கு மாகாணத்திலும் தெற்கு மாகாணத்திலும் இரு புதிய பல்கலைக் கழகங்களை அமைப்பதற்கு கல்வி மந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்ல அரசாங்கத்திடம் சிபார்சு செய்துள்ளார்.

இந்த இரு பல்கலைக் கழகங்களிலும் முதலில் கலைப்பகுதி பட்டதாரி மாணவர்களுக்கு பயிற்சியளிக்கப்படுமென்றும் பின்னர் விஞ்ஞானப் பகுதி மாணவர்களுக்கும் போதனை அளிப்பதற்கு வகை செய்யுமுகமாக வசதிகள் விஸ்தரிக்கப்படுமென்றும் அறியப்படுகிறது.

இப்புதிய பல்கலைக் கழகங்கள் உருவாக்குவது பற்றி விரிவான திட்டம் தயாரிப்பதற்கு கல்வி மந்திரி பல்கலைக் கழக உபவேந்தருடன் விரைவில் ஆலோசனை நடத்தவிருக்கிறார்.

## 9 புதிய தமிழ் வழக்கறிஞர்கள்

யாழ்ப்பாணம், புதன்

கடந்தவருடம் டிசம்பர்மாதம் நடத்தப்பட்ட வழக்கறிஞர்களுக்கான பரீட்சையில் 9 தமிழ் மாணவர்கள் சித்தி எய்தியுள்ளார்கள்.

ஏ. அந்தோனி, என். அருணாசலம், சி. துரைராசா, ஏ. கெங்காதரன், க. பரமசிவம், பெ. சுந்தரலிங்கம், ஏ. இ. [illegible] வல்வராஜன், பா. யோக[illegible],

பல்கலைக்கழகத்தில்

## 2,700 மாணவர் அனுமதிக்கப்படுவர்

கொழும்பு, புதன்

கொழும்பு பேராதனைப் பல்கலைக்கழகங்களில் இவ்வருடம் ஆகக்கூடியது 2700 மாணவர்களை புதிதாக சேர்த்துக் கொள்ள முடியும் என தெரிய வருகிறது. 25,400 மாணவர்கள் புகுமுகப் பரீட்சைக்கு தோற்றினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பிட்ட ஒரு பாடத்தில் 40 புள்ளிகளுக்கு மேல் எடுத்த ஒரு மாணவன் அந்த பாடத்தில் சித்தியடைந்ததாக கணிக்கப்பட்டால் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 50 சதவிகிதத்தினர் முழுப் பரீட்சையிலும் சித்தியடைவார்கள் என பல்கலைக்கழக, கல்வி இலாகா வட்டாரங்கள் மதிப்பிட்டுள்ளன.

[illegible]

## கருணாநிதி கைது

மொழிப்பிரச்னை பற்றி நாளை வியாழக்கிழமை அவசிய விவாதம் ஒன்று பார்லிமெண்டில் நடைபெறும். பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரி காங்கிரஸ் பார்லிமெண்டரிக் குழு கூட்டத்தில் பேசுகையில், மொழிப் பிரச்னை இப்போது நாட்டின் முக்கிய பிரச்னையாக உள்ளதாகவும் இதுபற்றி கட்சியே முடிவு செய்ய வேண்டும் என்றும் தெரிவித்தார். பிரதமர் பார்லிமெண்டில் உள்ள சகல கட்சித் தலைவர்களுடன் மொழிப் பிரச்னை சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்தி அவற்றை காங்கிரஸ் கட்சிக்கு சமர்ப்பிப்பார்.

பாரத பாதுகாப்பு சட்டத்துக்கு முரணான வகையில் நடந்து கொண்டார் எனக் குற்றம் சாட்டப்பட்டு தி.மு.க. தலைவர்களில் ஒருவரான திரு. மு. கருணாநிதி நேற்றிரவு கைது செய்யப்பட்டார்.

கைதாகியிருந்த மேலும் 300 மாணவர் இன்று சென்னையில் விடுதலை செய்யப்பட்டனர். நேற்று 100 மாணவர்கள் விடுவிக்கப் பட்டனர். நாளை மேலும் சுமார் 100 மாணவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள்.

நீதியரசரின்

## முருக வழிபாட்டிற்குப் பின் அசைஸ் விசாரணை ஆரம்பம்

யாழ்ப்பாணம், வியாழன்

வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தின் இவ்வாண்டு முதலாவது பருவ விசாரணை யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நேற்றுக்காலை 11 மணிக்கு ஆரம்பமானது.

நீதியரசர் திரு பி. ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் விசாரணைகள் ஆரம்பமானது. நீதியரசர் சம்பந்தப்பட்ட சகல உத்தியோகத்தர்களுடனும், மற்றும் நீதிபதிகள், வழக்கறிஞர்களுடனும் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்குச் சென்று வழிபாடு செய்துவிட்டு நீதிமன்றத்துக்குள் வந்தசமயம், சார்ஜன்ட்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யாயிக்கு

பிறர் செய்த பிழையைப் பொறுக்காமல் ஒறுத்தவர்க்கு ஒருநாளில் தோன்றி அழியும் சிறிய இன்பமும், பொறுத்தவர்க்கு ஊழியளவும் அழியாத பெரிய புகழும் உளவாம்.

— திருவள்ளுவ நாயனார்

ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு மாசி மீ 7 உ. (18-2-65)

## யாழ்ப்பாணபொலிஸ் விடுதியின் கதி

வெலிக்கடைச் சிறைச்சாலையைவிட யாழ்ப்பாண பொலிஸ் விடுதி மிக மோசமாக இருப்பதாகவும், சுகாதாரவசதிகள் படுமோசமாக இருப்பதாயும் மரணவிசாரணை அதிகாரி திரு. அபிர்தலிங்கம் தெரிவித்துள்ள கண்டனம் பாரதூரமானது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் இதைக் கவனித்து, அங்கு தக்க சீர்திருத்தங்களைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

சென்ற வாரத்திலே இதே பொலிஸ் விடுதியில் இரு விபத்துகள் ஏற்பட்டுள்ளன. ஒன்று விவாகமானவர் விடுதியில் மின்சாரம் தாக்குண்டு ஒரு கான்ஸ்டபிள் மாண்டுள்ளார். விவாகமாகாதவர்கள் விடுதியிலே சாப்பாட்டில் ஏதோ கோளாறு ஏற்பட்டதால் 67 பேருக்கு நோய் கண்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சை செய்ய வேண்டியதாயிற்று. நல்ல வேளையாக இதில் யாரும் சாகாமல் தப்பினர். ஒரேவாரத்தில் விடுதிகளில் ஏற்பட்டுள்ள இவ்விரு சம்பவங்களும் இங்கு நிலைமை எவ்வளவு மோசமென்பதை விளக்கப் போதுமானவை.

இப்பொலிஸ் விடுதியிலே பொலிசார் தமது குடும்பங்களுடன் வசிக்கப் பயப்படுகிறார்களாம். அங்குள்ள மின்சாரக் கம்பிகள் அடிக்கடி அறுந்து விழுவதாயும் முன்னரும் ஒருவர் இவ்விதவிபத்துக்குப் பலியானதாகவும், ஆனால் மேலதிகாரிகள் எவ்வித பாதுகாப்பு நடவடிக்கையுமெடுக்கவில்லை என்றும் தெரிகிறது. பொதுமக்களின் ஊழியரான பொலிசாரின் பொறுப்பும் கடமையும் மிகக் கடினமானது. அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பும் வசதிகளும் அளிக்க வேண்டியது அரசாங்கத்தின் மேலான கடமை. தலைமை அரசாங்கத்துக்குப் பல்வேறு பிரச்னைகள் இருப்பதால் இதைப்பற்றிக் கவனிக்க முடியவில்லையா? பிரிட்டனில் பொலிஸ் பற்றிய பொறுப்பு 'கவுண்டி கவுன்சில்' போன்ற ஸ்தலஸ்தாபனங்களிடமே இருக்கின்றன. அதுபோல் இங்கும் ஏன் மாற்றி அமைக்கக் கூடாது? அப்படிச் செய்தால் பொலிசார் அதிக திருப்தியுட

சூறாவளி

## பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வீடுகள்

பம்பலப்பிட்டி, புதன்

சூறாவளியினால் பாதிக்கப் பகுதிகளில் குறைந்த வருவாயுடைய பிரிவினருக்கென வீடமைப்பு திட்டமொன்றைச் செயல்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இத்திட்டத்துக்கென 25 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் விரைவில் செயல்படுத்தப்படுமென சமூக சேவை இலாகாவைச் சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

## உத்தியோகஸ்தர்கள் கவலை

பம்பலப்பிட்டி, புதன்

இலங்கை நிர்வாக சேவைப் பிரிவுக்கு பதவி உயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சையை திறைசேரி காலதாமதப்படுத்தி வைத்திருப்பது குறித்து அரசாங்க லிகிதர் சேவையில் விசேஷ பிரிவிலுள்ள சிரேஷ்ட உத்தியோகஸ்தர்கள் கவலை கொண்டுள்ளார்கள். பலர் இவ்வித நேர்முகப் பரீட்சைக்கு கடந்த மூன்று வருடகாலமாகக் காத்துக்கொண்டிருப்பதாக அறியப்படுகிறது. வழக்கமாக இவ்வித தகுதி உள்ள உத்தியோகஸ்தர்கள் 6 மாத காலத்துள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுண்டு.

மேற்படி உத்தியோகஸ்தர்கள் சங்கம் இது குறித்து நிதி மந்திரி டாக்டர் என். எம். பெரேராவுக்கு முறைப்பாடு தெரிவித்திருந்தனர்: அவர் திறைசேரிக் காரியதரிசியிடம் நேர்முகப் பரீட்சையை நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளுமாறு அறிவித்திருந்தும் இதுவரை நேர்முகப் பரீட்சை ஐதும் இடம் பெறவில்லை.

வாழவும், பொலிசுக்கும்பொது மக்களுக்கும் நல்லுறவு அதிகரிக்கவும், இதேசமயம் தலைமை அரசாங்கத்தின் வீண் பளுவு குறையவும் கூடும். அந்நியர் ஆட்சியில் செய்யப்பட்ட பழைய ஏற்பாட்டை சுதந்திர இலங்கை மாற்றி அமைப்பது பல காரணங்களாலும் அவசியமாகும்.

## தொழிலாளர் உரிமை

இலங்கை ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரான அஸீஸுக்கும் அவரது சகாக்களுக்கும் அத்துமீறி தோட்டத்தில் புகுந்ததாகக் குற்றஞ்சாட்டி விதித்திருந்த சிறைத் தண்டனையைப் பிரிவி கவுன்ஸில் ரத்துச்செய்துவிட்டது. அவர்கள் பெரும் பணச் செலவில் அப்பீல் செய்து கொண்டிராவிடில் சிறைத்தண்டனையை அனுபவித்திருக்க வேண்டியதே. இந்த வாய்ப்பு இல்லாதவர் கதி என்ன?

தோட்ட நிர்வாகத்துக்குச் சங்கடம் ஏற்படுத்தவேண்டுமென்ற நோக்கம் அவர்களுக்கு இருந்ததாக நிரூபிக்கவில்லையென்ற காரணம் காட்டியே தண்டனை ரத்துச்செய்யப்பட்டுள்ளது. என்றாலும் இதில் அடிப்படை விஷயம் தொழிலாளருக்குத் தங்கள் வீடுகளில் யாரையும் வரவேற்றுப் பேசும் உரிமை பற்றியது. தோட்டம் சிலருக்குச் சொந்தமாக இருக்கலாம். ஆனால் அதில் குடியிருந்து வேலைசெய்யும் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளை மறுக்கமுடியாது. காலனி ஆட்சியில் செய்யப்பட்டுள்ள இக்கொடாத சட்ட விதிகளை உடனடியாக மாற்றித் தோட்டத் தொழிலாளருக்கு அடிப்படை மனித உரிமை வழங்கவேண்டிய அவசியத்தை இந்தப் பிரிவிகவுன்ஸில் தீர்ப்பு அழுத்துவதாகவுள்ளது. தொழிலாளர் [illegible] பற்றிப் பேசுபவர்கள் இ[illegible] ஒரிய குறையை நீக்க உடன் நடவடிக்கை எடுப்பரா?



## வள்ளுவன் புகழ் வாழியவே

— விஜயா விந்தன் —

கங்குல் நீங்கிக் கிழக்கினிலே
கதிரே பொங்கி யெழுந்ததுபோல்
பொங்கிடு மங்கள மெங்கணுமே
பொலிவுற வந்த திருமறையாம்
எங்கள் பண்டை வாழ்வினையும்
எடுத்தே காட்ட வந்துதித்த
திங்கட் குறளை எம்நெஞ்சால்
தினமும் ஏற்றிப் போற்றிடுவோம்.

தென்னு தமிழின் சுவைசொட்டத்
தேர்ந்த கருத்து திசையெட்டும்
உள்ள மனிதர் தம்முள்ளே
உத்தம எண்ணந் தனைத்தோற்றி
கள்ளம் நீங்கிப் புதுவாழ்வைக்
காணச் செய்யும் தெய்வமறை
வள்ளுவப் பெரியான் வடித்திட்டான்
வாழிய வாழி யவன்புகழே!

ஆசிரியருக்குக் கடிதங்கள்

## ஒரு அவசரப் பிரச்னை

வருகிற பாராளுமன்றத் தேர்தலில் வாக்காளர்கள் வாகனங்களை உபயோகிப்பது பற்றிய சட்டம் நடைமுறைக்கு ஒவ்வாததும் -சரியானதுமாகாததுடன் மக்களின் உரிமையைப் பாரதூரமான அளவிற்குப் பாதிக்கிறதென்றே கூற வேண்டும். சட்டத்தைப் பற்றி விபரித்தவர்களும் தெளிவான முறையிலும், மக்களுக்கு உதவியாக இருக்கக்கூடியவகையிலும் ஒன்றும் செய்யவில்லை இதனால் நிலைமை மிகவும் அதிருப்திகரமாக உள்ளதென்பது தெளிவு. தேர்தலுக்கு முன்னதாக இந்த விஷயத்தை நீதிமன்றத்துக்கு கொண்டு வந்து சட்டரீதியான அபிப்பிராயத்தை பெற்றுக்கொள்வது நிதானமானதும் அத்தியாவசியமானதுமாகும். நிர்வாகத்துறையிலும் பாராளுமன்ற முறையிலும் ஒருவித சீர்கேடும் முறிவும் இல்லாதிருக்கவும் மக்கள் உரிமைகள் பாதிக்கப்படாதிருக்கும் வகையிலும் வாக்காளர்கள் தங்கள் வாக்குரிமைகளை உபயோகிக்கும் வகையிலும் மேற்கூறப்பட்ட நடவடிக்கையை மேற்கொள்வதே சிறந்ததாகும்.

சட்டம் தகுந்த காரணங்களில்லாது மக்கள் சுதந்திரமாக போக்குவரத்துசெய்வதை உலகத்தின் எந்தப் பாகத்திலாகுதல் தடைசெய்யவோ அன்றேல் பறிக்கவோ முடியாது.

ராஜாஜி அண்மையில் எழுதிய குறிப்புகளிலிருந்து இங்கே தரப்படும் சுருக்கம் வருங்காலத்தில் நிகழவிருக்கும் சம்பவங்களை நாம் பாராமுகம் செய்தால் என்ன விளைவுகள் ஏற்படுமென்பதைச் சிந்திக்க வைக்கிறது.

நாட்டில் நாகரிகத்திற்கெதிரான செயல்கள் நடைபெற்று வருகின்றன. சட்டத்தைப் புறக்கணிப்பதும் அடிப்படை உரிமைகளை அகற்றுவதுமான செயல்களில் ஈடுபட்டிருக்கும் நம்மை சீர்திருத்தவாதிகள் என அழைப்பதற்கு என்ன தகுதியிருக்கிறது? எங்கள் நாகரிகத்திற்கு மாறானவகையில் அரசாங்கத்திற்கும் வாழ்க்கை முறைக்கும் எங்களை அறியாமலே நாம் இடமளித்து வருகிறோம்.

எஸ். சிவசுப்பிரமணியம்
கொழும்பு.

## என்.எம். பெரேராவுக்கு கறுப்புக் கொடியா?

சமீபத்தில் யாழ்ப்பாணத்திற்கு விஜயஞ்செய்யவிருக்கும் நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேராவின் வருகையை எதிர்த்து கறுப்புக்கொடி காட்டப்போவதாக தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கை இன்றைய அரசியல் நிலையில் இலங்கைவாழ் தமிழ்மக்களுக்கு இழைக்கும் பெரிய தீங்காகும். தமிழ் மக்களுக்குப் பிரதேச சுயஆட்சியும் தமிழ் மொழியை தமிழ்ப் பிரதேசத்தின் உத்தியோக மொழியாகவும் ஆக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கத்துடனும் மற்றும் இடதுசாரி முற்போக்குவாதிகளுடனும் சேர்ந்து எடுத்து வருகின்றார் டாக்டர் என். எம். பெரேரா. வரப்போகின்ற தேர்தலில் தென்னிலங்கையில் யு. என். பி., எம். ஈ. பி., ஜே. வி. பி., எஸ். எல். எவ். எஸ். பி. ஆகிய பிற்போக்குக் கட்சிகளை எதிர்க்கும் முற்போக்கு சக்திகளின் பிரதிநிதியான தமிழ் மக்களின் நண்பரான டாக்டர் என். எம். பெரேராவை எதிர்த்து கறுப்புக்கொடிகாட்டுவது தமிழ் அரசுக்கட்சியின் அரசியல்நேர்மையின்மையைப் பிரதிபலிக்கின்றது.

எம். ஸி. சுப்பிரமணியம்
தலைவர்,
அகில இலங்கை,
சிறுபான்மைத் தமிழர் மகாசபை.

## புதிய வீதி

தெரனியகலை, புதன்

காவலப்பிட்டியையும் எட்டியாந்தோட்டையையும் தொடர்புபடுத்தும் ஒரு புதிய வீதியைப் பொதுமராமத்து பகுதியினர் அமைக்கவிருக்கின்றனர். இந்தவீதி மத்திய மாகாணத்தையும் சப்ரகமுவமாகாணத்தையும் இணைக்கும்.

## தியாகிகளுக்கு அஞ்சலி

மாவிட்டபுரம், புதன்

பருத்தித்துறை வியாபாரி மூலை விக்கினேஸ்வரா படிப்பகத்தின் செயற்குழுக் கூட்டத்தில் தென்னிந்தியாவில் தமிழுக்காக உயிர்நீத்த தியாகிகளுக்கு 2 நிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

## ஐயாறன் எழுதுவது

ஒரு நீதியரசர், உத்தியோக உடையான சிவப்பு அங்கி, தலையில் "விக்" இவற்றுடனே ஒரு கோவில் வாசலிலே அதிகாரிகள் புடைசூழ நின்றுகொண்டு எல்லார் முன்பும் கண்ணீர்விட்டு அழுதுதொழுத காட்சியை நீங்கள் கண்டதுண்டோ? நேற்று காலை நல்லூர் முருகன் கோயில் முன் இதைப் பலரும் காணக்கூடியதாயிருந்தது.

முன்னர் ஒருமுறை யாழ்ப்பாணத்தில் அஸைஸ் விசாரணையை ஆரம்பிக்குமுன்பாக நீதி அரசர் ஸ்ரீஸ்கந்தராஜா நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு உத்தியோக முறையில் வந்து வழிபட்டு புதிய சம்பிரதாயத்தை ஏற்படுத்தி, சைவ சமூகத்துக்கே ஒரு புதிய மதிப்பையும் பெருமையையும் அளித்தார்.

நேற்றுக்காலையிலும் அஸைஸ் நீதிமன்ற விசாரணைக்கு முன் அவர் தம் துணைவியாருடன் முன்னே மூன்று மோட்டார் சைக்கிள்களில்பொலிசார் அணிவகுத்துச்செல்ல,கோயில் வாசலில் வந்து இறங்கினார். அவருக்குப் பின்னே வெறுங்காலுடன் அரசாங்க அதிபரும் நீதிபதிகளும், வேறு அதிகாரிகளும், வழக்கறிஞர்களும் முருகன் சந்நிதானத்தில் நட்டமே நின்றுகொண்டிருந்தனர். கோவில் பெரிய மணிகள் 'டான், டான்' என்று ஒலித்தன. மூலஸ்தானருக்கு தீபாராதனை நடக்கபோதுநீதி அரசர் சிரமேற் கரங்குவித்து கண்ணீர்விட்டதைக்கண்டேன். கொழும்பில் அந்த ராட்சத மரம் விழுந்ததே, அதிலிருந்து அவர் தப்பி இராவிடில், இப்படி இங்கு வந்து வழிபடவும் அஸைஸ் விசாரணையை நடத்தவும் முடியுமா? நமது கெட்டித்தனத்தாலும் திறமையாலுமா நாம் இவ்வித ஆபத்துக்களுக்கெல்லாம் தப்பி வாழ்கின்றோம்! நம்மை அறியாமல் அந்த தெய்வம் நம்மை கண்ணை இமை காப்பதுபோல் காத்துவருவதாலல்லவோ வாழமுடிகிறது. இவ்வித எண்ணங்கள் உள்ளத்தில் உந்த நன்றி உணர்ச்சியுடனே தான் அவர் மனம் உருக கண்ணீர் விட்டாரா?

* * *

ஸ்ரீகுமாரசுவாமிக்குருக்கள் இனிமையாக சம்ஸ்கிருத சுலோகங்களால் முருகனைத் தோத்தரித்து, ஆசீர்வாதங்கள் கூறி, நீதி அரசர் தம்பதிகளுக்கும், அரசாங்க அதிபர், நீதிபதிகள் முதலியோருக்கும் விபூதி பிரசாதங்களை வழங்கினார். ஸ்ரீ மணி பாகவதர் "வாழ்க அந்தணர்—" "வான் முகில் வழாது பெய்க" என்ற வாழ்த்துக்களைப் பாடினார். சிங்கள பௌத்தரான அரசாங்க அதிபரும், வெறுங்காலுடன் நின்று பக்தியுடன் விபூதி பிரசாதத்தைப் பெற்று, நெற்றியில் இட்டுக்கொண்டார்.

சுமார் அரை மணி நேரம் கோயில்முன் கண்ட இவ்வித அபூர்வ காட்சியை சினிமாப் படமெடுத்து பல இடங்களிலும் காட்டி இருக்கவேண்டும். நீதியரசர் உயிர் தப்பி, முருகன் கோவில்முன் உத்தியோக முறையில் வழிபட்ட காட்சியைப் பார்க்க சொல்ல முடியாத ஆனந்தமாக இருந்தது.

"முருகன்தான் அவரைக் காத்தது" என்று டாக்ஸி டிரைவரிடம் கூறியதற்கு, அவர், "அவரது நடுக்கண்ட நீதியே அவரைக் காத்தது" என்றார். "நீதி வழங்கச் செய்வதும் உள்ளே இருக்கும் அந்த முருகன்தானே" என்று இதைக் கேட்ட ஒரு தாய் சரியாக ஞாபகமூட்டினார்.

* * *

நல்லூர் கோவிலில் ஹரிஜனங்களும் வந்து தரிசிக்கும்படி செய்த கைங்கரியத்தில் நீதி அரசர் ஸ்ரீஸ்கந்தராஜாவும்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்ணுவிரதத்தை நிறுத்துமாறு பலதலைவர்கள் வேண்டுகோள்

## வினேபாஜி மிகவும் பலவீனமடைந்துவிட்டார்

புதுடில்லி, பெப். 17

ஆச்சார்யா வினேபாஜி தமது உண்ணுவிரதத்தை நிறுத்த வேண்டும் என காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ் அவரைக் கேட்டுக் கொண்டிருக்கிருர். வினேபாஜி இப்போது மிகவும் பலவீனமாகக் காணப்படுகிருர் என டாக்டர்கள் அறிவித்திருக்கின்றனர்.

மொழிப்பிரச்னைக்கு வினேபாஜியின் 8 அம்ச பரிகாரத்தை தாம் ஏற்றுக் கொள்வதாக அவர் கூறியிருக்கிருர்.

நேருவின் வாக்குறுதிக்கு சட்ட வடிவம் கொடுக்க சட்ட நிபுணர்கள் உடயோகிக்கப்பட வேண்டும் எனக் கூறிய காமராஜர், 1937-ம் ஆண்டு முதல் ஹிந்தி தம்மீது சுமத்தப்படும் என தமிழ் மக்கள் அஞ்சிவந்தார்கள் என்றும், ஹிந்தி அமுலுக்கு வந்த ஜனவரி 26-ம் திகதி முதல் மேலும் அவர்கள் அச்சம் கொண்டு விட்டார்கள் என்றும் தெரிவித்தார்.

1937-ம் ஆண்டு சென்னையில் ராஜாஜி மந்திரிசபை, பாடசாலைகளில் ஹிந்தியை கட்டாயமாகப் புகுத்தியது முதல் இந்த அச்சம் இருப்பதாக அவர் கூறினர்.

14 முதன் மந்திரிகளும், கேரள கவர்னர் கிரியும் வினேபாவின் மொழிப் பரிகாரத்தை ஏற்பதாக. வினேபாஜிக்கு தெரிவித்திருக்கின்றனர்.

ஆந்திர பிரதேசத்தில் இப்போது அமைதி நிலவுவதாய் உண்ணுவிரதத்தை நிறுத்துமாறு முதன்மந்திரி பிரம்மானந்தரெட்டி வினேபாஜிக்குதந்தி அனுப்பியிருக்கிருர்.

ஆந்திர பிரதேசத்தின் ஆட்சிமொழி இன்னும் பத்து ஆண்டுகளில் முழுக்க முழுக்க தெலுங்குக்கு மாற்றப்படும்என முதன் மந்திரி அறிவித்திருக்கிருர்.

மேற்கு வங்காளமும் தனது ஆட்சிமொழியை வங்காளத்தில் மாற்றத் தீர்மானித்திருக்கிறது.

### ஒரே ஆண்டில் 30 இலட்சம் கார்

பான், பெப் 17.

மேற்கு ஜெமர்னியில் சென்ற ஆண்டில் மட்டும் 30 இலட்சம் கார்கள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. இது மோட்டார்த்தொழில் ஏற்படுத்திய பெருஞ்சாதனையாகும். 1963-ல் உற்பத்தியான அளவைவிட இது 8% அதிகமாகும். கடந்த ஆண்டில் 15 லட்சம் கார்கள் ஏற்றுமதியாகி இருக்கின்றன. 1964-ல் இறக்குமதியான கார்களின் மொத்த எண்ணிக்கை 1,70,000. கடந்த 10 ஆண்டுகளில் மேற்கு ஜெர்மனியில் கார் உற்பத்தி மூன்று மடங்கு பெருகியிருக்கிறது.

### "சுதந்திர சிலை"யை தகர்க்க சதி

நியூயோர்க், பெப். 17

அமெரிக்காவிலுள்ள தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஞாபகச்சின்னங்களை வெளிவைத்துத் தகர்க்க நடைபெற்ற ஒரு சதியைத் தொடர்ந்து 3 நீக்ரோக்களும், 1 கனடிய பெண்ணும் கைது செய்யப்பட்டிருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

நியூயோர்க் கடலிலுள்ள சுதந்திரச் சிலை, சுதந்திர மணி, வாஷிங்டனிலுள்ள ஞாபகார்த்த ஸ்தாபி ஆகியன இவற்றில் சிலவாம்.

### சீனு மற்ரெரு குண்டை வெடிக்கும்

வாஷிங்டன், பெப். 17

சீனு இரண்டாவது அணு குண்டு ஒன்றை வெடிக்க ஆயத்தம் செய்து வருவதாக அமெரிக்க ராஜாங்க இலாகா அறிவித்தது. எப்போது வெடிக்கப்படும் என அறிவிக்கவில்லை. ஆனல் இதுபற்றிவிரைவில் அறிவிப்பதாகக் கூறிய ராஜாங்க இலாகா, இவ்விஷயத்தை சில நட்பு நாடுகளுடன் அமெரிக்கா பகிர்ந்து கொண்டிருப்பதாய் அறிவித்தது.

அமெரிக்காவின் அறிவிப்பு பிரிட்டனின் கருத்தை ஊர்ஜிதம் செய்வதாய் இருக்கிறது என லண்டனில் அறிவிக்கப்பட்டது.

### அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்

தாம்பாலா, பெப். 17

உகண்டாவிலுள்ள அமெரிக்கத் தூதராலயத்திலுள்ள கொடியைக் கீழே இறக்க முயன்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிசார் கண்ணீர் புகை பிரயோகம் செய்தனர்.

வெனிசூலா, இந்தோனேஷியா ஆகிய இடங்களிலும் அமெரிக்கத் தூதராலயங்களுக்குமுன் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

### 9-வது மந்திரிசபை

சைகோன், பெப். 17

தென்வியட்நாமில் வெளிநாட்டுமந்திரி தலைமையில் நேற்று அமைக்கப்பட்ட புதிய அரசாங்கம் கடந்த 14 மாதங்களில் ஏற்பட்ட 9-வது அரசாங்கமாகும். இந்த மந்திரிசபையில் 3 ராணுவ அதிகாரிகளும் இருக்கின்றனர். 21 பேர் மந்திரிசபையில் இருக்கின்றனர்.

# வியட்னமிலிருந்து அமெரிக்கா வெளியேறவேண்டும்

## ரஷ்யா, போலந்து கோரிக்கை

நியுயோர்க், பெப். 17

வடவியட்னமில் அமெரிக்கா ஆக்கிரமிப்பு செய்திருக்கிறது என்றும், இது சர்வதேச சட்டத்தை மீறிய செயல் என்றும் போலந்து ஐ. நா.வில் குற்றஞ் சாட்டியது. அமெரிக்கத் துருப்புக்கள் வடவியட்னமிலிருந்து வெளியேற வேண்டுமென்றும் போலந்து கேட்டுக் கொண்டது.

இதே போல், அமெரிக்கத் துருப்புக்கள் வியட்னமிலிருந்து வெளியேற வேண்டுமென்றும் சோவியத் பிரதமர் கோஸிஜின் கூறியிருக்கிருர்.

திரு. கோஸிஜின் வடவியட்னம், வடகொரியா, சீனு ஆகிய நாடுகளுக்குச் சென்றுவிட்டு மாஸ்கோ திரும்பிய பின் இந்த அறிக்கையை விடுத்தார். அமெரிக்காவின் செயல் உலகப்போர் ஒன்றுக்கு வழிவகுக்கும் என்றும் மாஸ்கோ ரேடியோ அறிவித்திருக்கிறது.

### உலகில் பெரிய திறவு கோல்

பிரன்ஷ்விக், பெப் 17.

உலகிலேயே மிகப் பெரிய திறவுகோல் மேற்கு ஜெர்மனியிலுள்ள பிரான்ஷ்விக் நகரசபைப் பொருட்காட்சிச் சாலையில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கிறது. பல நூற்ருண்டுகள் பழமையான ஒரு இரும்புப்பட்டறையிலிருந்து இந்தத் திறவுகோல் வாங்கப்பட்டது. தமது பட்டறையை விளம்பரப்படுத்துவதற்காக உரிமையாளர் இந்த மாபெரும் சாவியைத் தயாரித்து பட்டறையின் வாசலில் தொங்கவிட்டிருந்தார். காலகடவில் இது பழைய இரும்புகளுடன் கலந்து விட்டன. சமீபத்தில் இது கண்டெடுக்கப்பட்டது. இந்தத் திறவுகோலின் நீளம் மூன்று அடி.

### மாபெரும் கிரகம்

கேப்கென்னடி, பெப். 17

இதுவரை எவரும் அனுப்பாத அளவு பெரிய வான்வெளிக் கிரகம் ஒன்றை அமெரிக்கா அனுப்பியிருக்கிறது. இதன் நிறை 630 டன்கள்.

### எடின்பரோ கோமகன்

கல்கத்தா, பெப். 17

மகாராணியின் கணவர் எடின்பரோ கோமகன் நேற்று கல்கத்தா வந்தார். நாளை அவர் ஆஸ்திரேலியா புறப்படுகிருர்.

### பொம்பிடோ திரும்பினர்

பாரிஸ, பெப். 17

இந்தியா பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு விஜயம்செய்திருந்த பிரெஞ்சு பிரதம மந்திரி பொம்பிடோ பாரிஸ் திரும்பினர்.

### ஆகாயத்தில் எஃகுச்சாலை!

எஸ்ஸென், பெப் 17

மேற்கு ஜெர்மனியிலுள்ள எஸ்ஸென் நகரில் 18 அடி உயரத்தில் 720 அடி நீளமான எஃகுப்பாலம் ஒன்று சமீபத்தில் 40 மணி நேரத்தில் கட்டி முடிக்கப்பட்டது. இந்தப் பாலத்தின் அடியிலுள்ளசாலை பழுது பார்க்கப்பட்டு வருகிறது. அதற்கு 2 ஆண்டுகள் பிடிக்கும். அதுவரையில் இந்த ஆகாய எஃகுப்பாலம் போக்குவரத்தைச் சமாளிப்பதற்கான மாற்றுச் சாலையாகப் பயன்படுத்தப்படும். இது போன்ற எஃகுப்பாலத்தை, சாலை பழுது பார்க்கப்படும் மற்ற இடங்களிலும் குறுகிய காலத்தில் அமைக்கமுடியும்.

### துருக்கியில் பூகம்பம்

அங்காரா, பெப். 17

துருக்கியில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சி காரணமாக 300 வீடுகள் நாசமடைந்தன.

### சூடானில் சண்டை

காட்டும், பெப். 17

தெற்கு சூடானில் கடும் சண்டை நடைபெற்றுவருவதாயும், சுமார் 50 வீடுகளுக்கு கலகக்காரர்கள் தீ வைத்ததாயும் அறிவிக்கப்பட்டது. அரசாங்க துருப்புகள் 3 கலகக்காரர்களைக் கொன்றனர்.

# மேற்கு ஜெர்மன் ஜனதிபதி தங்கும் 'பெலிவு' அரண்மனை

மேற்கு பெர்லின், பெப். 17

மேற்கு பெர்லின் நகரில் மிகவும் பழமையான 'பெலிவு' அரண்மனை அமைந்திருக்கிறது. மேற்கு ஜெர்மன் ஜனதிபதி லூப்கே இந்நகருக்கு வரும்போது அவர் தங்குவதற்கான வாசஸ்தலமாக இந்த அரண்மனை பயன்படுத்தப்பட்டுவருகிறது. ஜனதிபதி இந்நகருக்கு அடிக்கடி வந்து தங்கி நகர மக்களுடன் கலந்துரையாடி மகிழ்கிருர். நகர மக்களும் இவ்விதம் ஜனதிபதி தங்களுடன் வந்து தங்குவதைப் பெருமையாகக் கருதுகிருர்கள்.

ஜெர்மனியிலுள்ள தொன்மையான கட்டிடங்களில் 'பெலிவு' அரண்மனையும் ஒன்ருகும். இதைக் கட்டிப் பல நூற்ருண்டுகள் ஆகின்றன. ரஷ்யாவை ஆண்ட ஜார் வம்ச மன்னர் முதலாம் அலெக்ஸாண்டர் இந்த அரண்மனையில் தங்கியிருக்கிருர். இந்த அரண்மனையின் மிகப் பழமையான பகுதியை, இரண்டாம் பிரடரிக் மன்னர் காலத்தில் பிரபலமான சிற்பியாக விளங்கிய நாபல்ஸ்டார்ப் கட்டினர். இரண்டாம் பிரடரிக் மன்னரின் கடைக்குட்டித் தம்பியான பெர்டினண்ட் இளவரசருக்கு 1780-ல் இந்த அரண்மனை உரிமையாகியது. அவர், பீலிப் பவுமான் என்ற புகழ்பெற்ற கட்டிடக்கலை நிபுணரைக் கொண்டு இந்த அரண்மனையின் மற்றப் பகுதிகளைக் கட்டி முடித்தார். 19-ம் நூற்ருண்டில் அரசகுடும்பத்தைச் சேர்ந்த பலர் இந்த அரண்மனையில் வசித்தார்கள். பிறகு சிறிது காலம் இந்த அரண்மனை கிராமியப் பொருட்காட்சிச்சாலையாக இயங்கிவந்தது.

1938-ல் இதை அரசாங்க விருந்தினர் விடுதியாக மாற்றினர்கள். இரண்டாம் உலகப் போரில் சேதமடைந்த இந்த அரண்மனை 1950-ல் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது.

1959-முதல் மேற்குப் பெர்லினில் ஜனதிபதியின் வாசஸ்தலமாக இந்த அரண்மனை பயன்பட்டுவருகிறது.

இந்த அரண்மனையின் உட்பகுதியில் இந்தக்கால முறைப்படி அலங்காரங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இரண்டாவது மாடியில் விருந்து மண்டபம் அமைந்திருக்கிறது. ஜனதிபதிக்கான அலுவல் அறை, குடியிருப்புப்பகுதிகள், 4 வரவேற்பு அறைகள், விழா மண்டபங்கள், நடன அரங்குகள் ஆகியவை தனித்தனியாக அமைந்திருக்கின்றன. அரண்மனை இவ்வளவு பெரிதாக இருந்தாலும் அதை ஆடம்பரமான மாளிகையாகக் கருத முடியாது.

அரண்மனையின் தோட்டம் மிகவும் இயற்கையான சூழ்நிலையில் அமைந்திருக்கிறது. குளிர்காலத்தில் வெண்பனி படர்ந்த மரம், செடி, கொடிகளின் மத்தியில் இந்த அரண்மனையின் தோற்றம் கண்கொள்ளாக் காட்சியாகும். பெர்லின் நகரை இரு கூருகப் பிரிக்கும் கெடுஞ்சுவரின் மிக அருகில் அமைந்திருப்பதால் இங்கு ஜனதிபதி தங்கும்போது சுவருக்கு அப்பால் இருக்கும் மக்களின் உணர்ச்சியை அறிய முடிகிறது. வரலாற்றுப் புகழ்வாய்ந்த இந்த அரண்மனை இன்னும் பல புதிய வரலாறுகளைப் படைக்கும் என்பதில் ஐயமில்லை.

# ராஜாஜி, தி. மு. க. மீது அழகேசன் குற்றச்சாட்டு

செங்கற்பட்டு, பெப். 17

பிரதம மந்திரி சாஸ்திரி, முதன் மந்திரிகள் மகாநாட்டைக் கூட்ட முயல்வது, தானும் திரு. சுப்பிரமண்யமும் மந்திரி சபையிலிருந்து ராஜினமாச் செய்ததின் நேரடி விளைவு என்றே தோன்றுவதால் திரு. ஏ. வி. அழகேசன் தனது ராஜிநாமாவை வாபஸ் பெறுமுன் இங்கு கூறினர்.

திருத்தணியில் ஜனதிபதி ராதாகிருஷ்ணனின் நூல் நிலையத்தில் புத்தகங்கள் கொளுத்தப்பட்டது முட்டாள்தனம் என்று கூறிய அவர் ராஜாஜியையும், தி மு கவையும்குறை கூறினர்.

தமிழ்நாட்டில் ஏற்பட்ட கலவரங்களினல் அரசாங்க பஸ்களுக்கு ஏற்பட்ட சேதம் ரூபா 6 லட்சம் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### ஆப்கான் பிரதமர்

புதுடில்லி, பெப். 17

ஆப்கானிஸ்தான் பிரதம மந்திரி 10 நாள் இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்யும் பொருட்டு நாளை டில்லி வருகிருர். டில்லியில் அவர் 3 நாட்கள் தங்குவார்.

### மந்திரிகளுக்கு $1\frac{1}{2}$ லட்சம் நஷ்டஈடு

கராச்சி, பெப். 17

பாகிஸ்தானில் உத்தியோக ரீதியான கடமைகளில் உயிர் துறக்கும் மந்திரிகளின் குடும்பங்களுக்கு ஒன்றரை லட்சம் ரூபாய் நஷ்டஈடு வழங்க அரசாங்கம் முடிவுசெய்திருக்கிறது.

லண்டன், பெப். 17

பிரிட்டன் தனது அதிகரிக்கப்பட்ட 15 சத விகித இறக்குமதித் தீர்வையை இரண்டரை முதல் ஐந்து சதவிகிதமாகக் குறைக்கும் என அறிவிக்கப்பட்டது.

### 'சேவையே போதும்'

—பீலிக்ஸ்

பெலியகொடை, புதன்

'சுதந்திரக்கட்சிக்கு தேர்தல் விஞ்ஞாபனம் தேவையில்லை, கட்சி கடந்தகாலத்தில் செய்த சேவையே போதும்'

இவ்வாறு உணவு. விவசாய மீன்பிடி மந்திரி திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்க பெலியகொடையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சுதந்திரக்கட்சி சார்பில் வத்தளையில் போட்டியிடும் டாக்டர் ஏ. டி. ஜே. எல் பியோவை ஆதரித்து மேற்படி கூட்டம் நடைபெற்றது.

திரு. பீலிக்ஸ் மேலும் பேசுகையில் சுதந்திரக்கட்சி தேர்தலில் வெற்றிபெறுவதற்காக கீழ்த்தரமான தந்திரங்களைக் கையாளவில்லைஎனக் கூறினர்.

### நவீன கடலையாக்க திட்டம்

சுழிபுரம், புதன்

சங்கரத்தை வழுக்கையாற்றுச் கடலையைத் திருத்திப் புனிதமாக யாழ்ப்பாண கோம்பயன்மணல் கடலையைப் போல் திகழச்செய்யவேண்டுமென்ற நோக்குடன் வட்டுக்கோட்டைக் கிராமசபைத் தலைவர் திரு. செ. சின்னத்தம்பி தலைமையில் ஒரு விசேட கூட்டம் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. சுடலையைத் திருத்த வேண்டிய வழிவகைகள் நன்கு ஆராயப்பட்டு செயல்படுத்தும் நோக்குடன் ஓர் உப செயற்குழு தெரிவுசெய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு குதிரைப்பந்தயத்திடலில்

# பலநாடுகளின் சாதனையை விளக்கும் பொருட்காட்சி

கொழும்புக் குதிரைப்பந்தயத்திடலில் நடைபெறும் கைத்தொழில் பொருட்காட்சி கவர்ச்சிகரமானதாகவும் மிக்க பயனுள்ளதாகவும் அமைந்துள்ளது. இப்பொருட்காட்சியில் இலங்கை மட்டுமன்றி இந்தியா, பாகிஸ்தான், சீனு, அமெரிக்கா, கிழக்கு ஜெர்மனி ஆகியனவும் பங்கு கொண்டுள்ளன. இலங்கை சுதந்திரமடைந்தபின் எவ்வளவு தூரம் கைத்தொழிலில் வளர்ச்சிபெற்றுள்ளது என்பதையும் வருங்காலத்தில் எவ்வளவு தூரம் வளர்ச்சியடைய வேண்டும் என்பதையும் இப் பொருட்காட்சி எடுத்துக் காட்டுகிறது. இப்பொருட்காட்சியை நன்கு விளங்கிக் கொள்ள தமிழ், ஆங்கிலம், சிங்களம் மும்மொழிகளையும் நன்கு தெரிந்திருக்க வேண்டும்.

### மின்விளக்குகள்

இலங்கை பொருட்காட்சிக் கூடத்தில் சிங்களம் மூலமாகவே விளக்கம் கொடுக்கின்றனர், தமிழில் விளங்கப்படுத்தினால் நல்லது என்று கூறியபோது மூன்று இடங்களில் தமிழில் விளக்கம் கொடுத்தனர். மேலும் விளம்பர நோட்டீசுகள் மும்மொழிகளிலும் வழங்கப்படுகின்றன. பொருட்காட்சி மைதானத்தில் அமைந்திருக்கும் நீர்வாவிகள், மின்விளக்குகள், சிறுவர் பூங்கா கொள்ளை அழகுடன் திகழ்கின்றன.

### கைத்தொழில் அபிவிருத்திகள்

பசியும் பிணியும் நீங்கி வசியும் வளனும் ஈழத்திருநாட்டில் பெருக அமைந்திருக்கும் நெசவு, சீமெந்து, இரசாயனம், கனரகத் தொழிற்சாலைகள் அங்கு காட்டப்படுகின்றன. சிறுகைத்தொழில்களுக்கு இலங்கையளிக்கும் முக்கியத்துவம் விளம்பரங்கள் மூலமும், உதாரணங்கள்மூலமும் காட்டப்படுகின்றது. களிமண் மூலம் சட்டி-பானை வனைதல், தென்னந்தும்பிலிருந்து கயிறு திரித்தல், நூல்நூற்றல் ஆகியனவும் அங்கு நடைபெறுகின்றன. அந்நியர் ஆட்சிக்குப்பின் இலங்கையின் தேசியச்செல்வமாக நின்று வருவாயைத்தரும் தேயிலை, றப்பர், தெங்கு எவ்வாறு பதனிடப்படுகின்றன என்பதும் பொருட்காட்சியில் சித்தரிக்கப்படுகிறது. தேசிய நலத்திற்காக ஆண்களும் பெண்களும் சரிநிகர் சமானமாக உழைத்து வருதலை பொருட்காட்சியும் வலியுறுத்திக் காட்டுகிறது.

### ரயில் கண்காட்சி

தபால்தந்திச்சேவைப்பகுதி, இலங்கை வானொலி தேசிய ஒலிபரப்புத் தகவல்பகுதி, இலங்கை புகையிரதப்போக்குவரத்துப்பகுதி ஆகியன தனித்தனியாக அமைந்துள்ளன. இலங்கைப் புகையிரதச்சேவை பகுதி மிகநுட்பமாகவும் அழகாகவும் அமைந்துள்ளது. புகையிரதங்கள், பாலங்கள், குகைகள் ஊடாக செல்லும் விதமும் ஒன்றையொன்று சந்திக்கும்போது நின்று விலகிச் செல்லும் வண்ணமும் குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

### இந்திய கண்காட்சி

இந்தியக் கண்காட்சிச்சாலையில் அசோகச் சக்கரமும் காந்தி, நேரு, இராதாகிருஷ்ணன் புகைப்படங்களும் நம்மை வரவேற்கின்றன. இந்தியாவின் சமயசமரசநோக்கை அங்கு அமைந்துள்ள புகைப்படங்கள் தெரிவிக்கின்றன. மதுரைமீனாட்சி அம்மன் கோவில் புகைப்படம் முதலிடத்தில் அமைந்துள்ளது. இந்தியாவின் கைத்தொழில் வளத்தை அங்கு உற்பத்தியாகும் உயர்ரக ஆடைகள், கனரகப் பொருள்கள், தளபாடப் பொருள்கள்மூலம் நாம் அறிந்து கொள்ளலாம்.

### விஞ்ஞானத்துக்கு அமெரிக்கா

அமெரிக்கப் பொருட்காட்சி நிலயம் விஞ்ஞானம்மூலம் தங்கள் நாடு முன்னேற்றமடைந்துள்ள பாங்கை அழகாக விளக்குகின்றது. இங்கு வைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு பொருள்களுக்கும் ஆங்கில மொழிமூலம் தெளிவாக விளக்கம் கொடுக்கப்படுகிறது.

ஜெர்மனி பொருட்காட்சி நிலயத்தில் இலங்கைக்குஜெர்மனி கைத்தொழில் வளர்ச்சிக்குச் செய்யும் உதவியும் அவர்கள் உதவியுடன்தொழில் நுட்பத்தில் தேர்ந்த மாணவர்களின் புகைப்படமும் இடம் பெற்றுள்ளன. மேலும் அவர்களின் கைத்தொழில் வளர்ச்சியும் காட்டப்படுகிறது.

### சீனு

சீனப் பொருட்காட்சி நிலையத்தில் சீனுவின் நுட்பக்கட்டிட வேலைகளும் சீனுவின் பல நூல்களும் இடம்பெற்றுள்ளன. சீனர் தங்கள் பண்பாடு கலாச்சாரத்தை திரைப்படம்மூலம் காட்டுகின்றனர்,

உயர்ரகக் கம்பளங்களும், சேலைகளும், தளபாடங்களும், கனரகப் பொருள்களும்பாகிஸ்தான் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

வர்த்தக ஸ்தாபனங்களின் விளம்பரங்கள் கைத்தொழிற் பொருட்காட்சியில் பேரிடத்தைக் கைப்பற்றுகின்றன, தங்கள் பொருள்களை விற்பனை செய்வதுடன் அவ்வர்த்தக ஸ்தாபனங்கள் மும்மொழியிலும் விளம்பரம் செய்து வியாபாரத்தைப் பெருக்க வழி செய்கின்றன. உருக்கில் உருவான மேல்மாடிக் கட்டிடத்தில் நின்று நாம்கைத்தொழில் பொருட்காட்சியின் முழு அழகையும் ஒருங்கே காண முடிகிறது. கைத்தொழிற் பொருட்காட்சியில் உள்சென்று வெளி வரும்வரை மக்கள் கஷ்டமுறாது பார்க்கும்வண்ணம் நல்ல ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

### உபயோகமான பொருட்காட்சி

மக்கள் இன்னலுறும் வேளையில் இத்தனை லட்சம் ரூபா செலவழிக்க வேண்டுமா எனச் சிலர் கருதுகின்றனர். நாட்டில் விழாக்களும் கொண்டாட்டங்களும் தலைமுறைதலைமுறையாகக் கொண்டாடப்படுவதற்கு காரணங்கள் உண்டு. மக்கள் புதுப்பொலிவும் ஊக்கமும் ஆக்கமும்பெற இந்நிகழ்ச்சிகள் வழிவகுக்கின்றன. கைத்தொழிற் பொருட்காட்சி அரசியல் விளம்பரமெனவும் ஆடம்பரச் செலவெனவும்சிலர் வர்ணித்தாலும் பொருட்காட்சி மக்களுக்கு மிக உபயோகமுள்ளதாகவே அமைந்துள்ளன. ஈழத் திருநாட்டினர் தங்கள் ஆக்கத்தாலும் ஊக்கத்தாலும் நாட்டை வளப்படுத்த வகைசெய்ததைக் கண்டு பெருமையும் பூரிப்பும் அடைய இக்கைத்தொழிற்காட்சி பெருந்துணை புரிகிறது. மேலும் இலங்கையை செல்வம் கொழிக்கும் நாடாக்கவும் மற்றைய சகோதர நாடுகளின் ஒத்துழைப்புடன் முன்னேறவும் இக்கண்காட்சி மக்களுக்கு ஊக்கமளிக்கிறது. க பூ.

---

## "நாட்டையும் மதத்தையும் காக்க"

மூதூர், புதன்

"எமது நாட்டையும் எமது மதத்தையும் எமதுவருங்கால சிறுர்களின் நலத்தையும் காத்துக் கொள்ளவேண்டுமானால் ஐக்கியத்திற்காகவும் ஜனநாயகத்திற்காகவும் பாடுபடும் ஐ. தே. கட்சியால் மட்டும் தான் முடியும். இன்று எமது நாடு நேரான பாதையில் செல்லவில்லை, பண்டாரநாயக்காவின் கொள்கைகளைப் பின்பற்றுவதாகக் கூறித்திரியும் இன்றைய பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா உண்மையில் கூட்டாட்சியுடன் சேர்ந்து நம்நாட்டில் சர்வாதிகார கம்யூனிச ஆட்சியை நடத்த முயலகின்றார். இனிமேலும் இதற்கு இடம் கொடுக்க இந்நாட்டு மக்கள் ஏமாளிகளல்ல" என்று இரட்டை அங்கத்தவர் தொகுதியான மூதூர்த் தொகுதியில் ஐ. தே. கட்சி சார்பில் போட்டியிடும் திரு. எச். டி. எல். லீலா ரெட்ண கூறினர்.

---

## வவனியாவில் கடுமழை

வவனியா. புதன்

வவனியாவில் கடும்மழை பெய்ததால் நெற்பயிர்கள் நாசமடைந்துள்ளன. கடும் வரட்சியினுல் பாதிக்கப்பட்டு விளைந்த ஒரு சில நெற்பயிர்களும் அறுவடை செய்யும் நாளில் மழை பெய்ததால் சேதமடைந்துள்ளது. சிலர் அறுவடைசெய்த நெல்லை வீட்டு முற்றங்களில் காயவிட்டிருந்தனர். சனிக்கிழமை தொடக்கம் திங்கட்கிழமை காலைவரை அதிக மழைபெய்துள்ளது.

---

## அரிசி இறக்குமதிக்கு மேலும் ரூ. 8 கோடி

பம்பலப்பிட்டி, புதன்

இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கு இந்த வருட மான்யத்தில் இலங்கை 8 கோடி ரூபா மேலதிகமாகச் செலவிட வேண்டியிருக்குமென மதிப்பிடப்படுகிறது.

பெரும்போகம் சீரழிந்ததாலும் பர்மா அரிசி விலையை உயர்த்தியுள்ளதாலுமே இவ்வித நிலை ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## ஒலிபரப்பு டைரக்டர் மாற்றம்

கொழும்பு, புதன்

தகவல் ஒலிபரப்பு டைரக்டர் திரு. எஸ். பி. சேனநாயக்கா பதவி மாற்றம்செய்யப்பட்டாரென அறியப்படுகின்றது. இவர் மாற்றப்படும் பட்சத்தில் இவரது இடத்தில் தற்போது கலாசார விவகார டைரக்டராகக் கடமையாற்றும் திரு. நிசங்கா விஜயரத்ன அல்லது ஒலிபரப்புப் பகுதி உதவி டைரக்டர் திரு. வின்சன்ட் பண்டிதா நியமிக்கப்படலாமென அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

---

## நெசவு நிலையம்

சுழிபுரம், புதன்

பண்ணாகம் தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் தமது லாபப் பணத்தில் புதிய நெசவு நிலையமொன்றை ஸ்தாபிக்கவிருக்கிறார்கள். இதற்கான அங்கீகாரத்தை கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற வருடாந்தப் பொதுக்கூட்டத் [illegible] ஆரம்பிக்கப்படுமெனத் தெரிய வருகிறது,

---

## தலைவர் தெரிவு

துணுக்காய், புதன்

கரைச்சிப் பிரிவுக் கிராம சபைத் தலைவர் தெரிவு வருகிற 19-ம் திகதி நடைபெறவிருக்கிறது. தலைவர் தெரிவில் திரு வி. ஆனந்தசங்[illegible] கே. செல்லையா, திரு வே. சுப்பிரமணியம் ஆகிய மூவர்களும் போட்டியிடுவார்கள்.

---

## "தமிழர் உரிமைக்குப்போராடும் எக்கட்சியையும் ஆதரிப்போம்"

—அமிர்தலிங்கம்

துணுக்காய், புதன்

"தமிழர்களின் பறிக்கப்பட்ட உரிமைகளைத் தர முன்வரும் எந்த அரசியல் கட்சிக்கும் நாம் ஆதரவளிக்கத் தயாராக இருக்கிறோம். தமிழரசுக்கட்சி தமிழ்பேசும் மக்களின் நலனில் அக்கறைகொண்டு பாடுபட்டுவருகிறது. கடந்த 14 ஆண்டுகளாக ஒரே கொள்கையோடு ஒரே இலட்சியத்திற்காக நாம் பாடுபட்டுவருகிறோம். எமது உரிமைகளைத் தர இணக்கம் தெரிவித்த ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி பதவிக்கு வந்ததும் எமது உரிமைகளைத் தர மறுத்தது. எமது ஆதரவில்லாமல் அரசாங்கம் நிலைக்கமுடியாதென்பதை நாம் உணர்த்தியிருக்கிறோம்" என்று பளை சந்தை மைதானத்தில் திரு. வேலுப்பிள்ளை தலைமையில் கிளிநொச்சித் தொகுதித் தமிழரசு கட்சி வேட்பாளர் வித்துவான் க.பொ.இரத்தினத்தை ஆதரித்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் வட்டுக்கோட்டைத்தொகுதி முன்னாள் எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கம் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:

"நமது நாட்டை நாமே வளங் கொழிக்கும் நாடாக மாற்றி வாழவேண்டும். இதன் பொருட்டு கடந்த சில ஆண்டுகளாகக் குடியேற்றப் பகுதிகளில் தமிழ்மக்களைக் குடியேறும்படி வற்புறுத்திவந்துள்ளோம்."

கிளிநொச்சித் தொகுதி தமிழரசு வேட்பாளர் வித்துவான் க. பொ. இரத்தினம் பேசியதாவது:

"முன்பு பறிகொடுத்த உரிமைகளை 2 வருட அவகாசத்தில் பெற்றுத்தருவதாகச் சிலர் பிதற்றுகிறார்கள். எம் இனத்திற்கு இக்கஷ்டநிலை யாரால் வந்ததென்பதை எம் மக்கள் இன்று நன்கறிவார்கள், நம் நாட்டிலிருந்து வெள்ளையர்கள் வெளியேறிய போது அவர்கள் கொடியும் வெளியேற்றப்பட்டது. அப்பொழுது நம் நாட்டிற்கென ஒரு கொடி தேவைப்பட்டது. அது தமிழினத்தை ஒடுக்கும் கொடியாக அமைந்துவிட்டது. அதுமாத்திரமன்றி மலைநாட்டில் 10 லட்சம் தமிழருக்குப் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டதால் இன்று மலைநாட்டு மக்கள் பிரதிநிதிகளாகப் பாராளுமன்றம் செல்லமுடியவில்லை"

இக்கூட்டத்தில் மெய்யரசன், இரா. இளஞ்செழியன், வே. கயிலாயபிள்ளை, க. திருநாவுக்கரசு, பண்டிதர் இராசையா, மு. சுப்பிரமணியம் ஆகியோருட்பட மற்றும் பலர் பேசினர்.

---

## டைரக்டரின் நேரடி நிர்வாகத்தின்கீழ் சேர்க்குக

### வானொலி அறிவிப்பாளர் சங்கம்கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்.

இலங்கை வானொலி அலுவலகத்தைச் சேர்ந்த அறிவிப்பாளர் சங்கத்தினர் சென்ற வாரம்கூடி தாங்கள் நேரடியாக இலங்கை வானொலி டைரக்டரின் நிர்வாகத்தின் கீழ் வரவேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றினர். தற்பொழுது அறிவிப்பாளர்கள் தங்கள் பகுதிகளைச்சேர்ந்த நிகழ்ச்சி தயாரிப்பாளர்களின் மேற்பார்வையிலேயே இயங்குகின்றனர்.

அறிவிப்பாளர்களின் மேல் தகுந்த காரணமில்லாமல் குற்றம் சுமத்தப்படுவதை தவிர்ப்பதற்காகவே மேற்கண்ட தீர்மானத்தை வானொலி அறிவிப்பாளர்கள் நிறைவேற்றியுள்ளார்கள் எனத் தெரியவருகிறது.

தமிழ் பகுதியில் ஒரு சிரேஷ்ட அறிவிப்பாளர் ஒருவருக்கு உத்தியோக வெளிவேலை, அதிக நேர வேலைச்சம்பளம், தற்காலிக வேலை முதலியன கொடுக்காமல் தனிப்பட்ட காரணங்களுக்காக நிகழ்ச்சி அதிகாரி துன்பப்படுத்துகின்றார் என்றும் இதுபற்றி வானொலிப் பகுதி டைரக்டரின் கவன[illegible]திற்கு கொண்டுவருவதென்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. குறிக்கப்பட்ட இந்த தமிழ் அறிவிப்பாளர்களுக்கு விசேஷ கடமைகள் கடந்த காலங்களில் கொடுக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

---

## அரசாங்க ஊழியரின் அரசியல் உரிமை

கொழும்பு, புதன்

அரசாங்க சேவை ஊழியருக்கு அரசியலுரிமை வழங்குவது குறித்து அரசாங்கம் பரிசீலனைசெய்துவருவதாக திறைசேரி உதவிக் காரியதரிசி அரசாங்கலிகிதர் சேவைச் சங்கத்திடம் தெரிவித்துள்ளார்.

சமீப காலங்களில் அரசாங்க சேவை ஊழியர்கள் தமக்கு அரசியலுரிமை வழங்கப்படவேண்டுமென அரசாங்கத்திடம் வற்புறுத்திவந்துள்ளார்கள்.


## மூக்கு கண்ணாடி நிபுணர் ஸ்தாபனம் ஒன்றுக்கு உபசரிப்பு உதவியாளர் தேவை

குறிப்பிட்ட பதவிக்கு பெண் மனுதார்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மனுதார்கள் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக்கொண்டிருக்கவேண்டியது அவசியம்.

மனுதார் ஆங்கிலத்தில் நல்ல தேர்ச்சியுடையவராகவும் குறைந்தது ஜி. சி. ஈ. (சாதாரணம்) தகுதியுடையவராகவும் இருக்கவேண்டும்.

மனுதார் கவர்ச்சிகரமானவராகவும், புத்திக்கூர்மையுடையவராகவும் இருக்கவேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் மனுதார் கொழும்பில் ஒரு மாதகாலப் பயிற்சி பெற தயாராகவிருக்கவேண்டும்.

வேதனம் பற்றி நேர்முகப் பரீட்சையின்போது தெரிவிக்கப்படும்.

உங்களைப்பற்றிய விபரங்களை எங்களுக்கு எழுதுங்கள்.

த. பெ. எண்:- 1616,
மே / பா "ஈழநாடு",
யாழ்ப்பாணம்.

1616


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பொதுக்கிணறுகளை பாவிக்க சிறுபான்மைத்தமிழருக்கு உரிமை

## ஒரே மேடையில் மூக்கட்சி அபேட்சகர்கள் ஆதரவு

உடுப்பிட்டி, புதன்

கரவெட்டிப்பகுதி சிறுபான்மைத் தமிழர்கள் தேனீர்க் கடைகளிலும் பொதுக் கிணறுகளிலும் பிரவேசம் செய்வது பற்றிய பிரச்னையை முன் வைத்து கனுவில் சனசமூக நிலைய முன்றலில் சிறுபான்மைத் தமிழர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டமொன்றில் உடுப்பிட்டித்தொகுதி வேட்பாளர்களான திருவாளர்கள் மு. சிவசிதம்பரம் (தமிழ் காங்கிரஸ்), ஆர், ஆர். தர்மரத்தினம் (சமசமாஜக் கட்சி) க. ஜெயக்கொடி (தமிழரசு) ஆகிய மூவரும் ஒரே மேடையில் தோன்றிப் பேசினர்.

நெல்லியடி பட்டினசபைக் குட்பட்ட பொதுக் கிணற்றையும் தேனீர்க் கடைகளையும் சிறுபான்மைத் தமிழர்களின் பிரவேசத்திற்குத் திறந்துவிட வேண்டும் என்ற கனுவில் சனசமூக நிலையச்செயலாளர் திரு. கே. ராசரத்தினத்தின் கோரிக்கையைத் தொடர்ந்து நெல்லியடி பட்டினசபைத் தலைவர் திரு. வே. சு. பொன்னையா பேசுகையில், "பொதுக் கிணறு என்று ஒன்று இருந்தால் அது சகல மக்களுக்கும் பொதுவானதே. அதில் தனியுரிமை கொண்டாட எவருக்கும் அருகதையில்லை. நெல்லியடிச் சந்தைக் கருகாமையில் உள்ள கிணறு நெல்லியடி பட்டினசபைக்குட் பட்டதுதானா என்பது இன்னும் சரியாக ஆராயப்படவில்லை. பட்டினசபைக்குட் பட்டதுதான் என்று உறுதிப் படுத்தப்பட்டால் உடனடியாகவே சிறுபான்மைத் தமிழரின் பாவனைக்குத் திறந்துவிடப்படும். தேனீர்க்கடைப் பிரவேசத்தைப் பொறுத்தவரையில் முதலாளிகளின் ஒத்துழைப்பு வேண்டும். முதலாளிகளுடன் சமரச முறையில் ஆலோசித்துக் கூடிய விரைவில் அவற்றையும் திறந்துவிட்ச் செய்யமுடியும். எந்த ஒரு சமூகச் சீர்திருத்தத்தையும் திடீரென ஏற்படுத்த முடியாது. அப்படி ஏற்படுத்துவதும் நிலைத்து இருக்காது" என்று கூறினர்.

தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகர் திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில், நெல்லியடியில் சந்தைக்கண்மையில் உள்ளது பொதுக்கிணறில்லையானால் பட்டினசபை எல்லைக்குள் புதிய பொதுக் கிணறு ஒன்றை வெட்டிப் பாவனைக்கு விட வேண்டும். தேனீர்க்கடைப் பிரவேசத்திற்கென முன்பொரு தடவை நான் செய்த முயற்சி பலிக்கவில்லை. இனிமேலும் கடைமுதலாளிகள் மனமாற்றமடையாது மறுத்தால் 1959-ம் ஆண்டு பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட மனித உரிமைச் சட்டத்தைப் பாவிப்பதற்கு என்னுலியன்ற உதவிகளைச் செய்வேன். சாத்தியமானதைக் கூறவே நான் விரும்புகிறேன்," என்று கூறினர்.

சமசமாஜக்கட்சி அபேட்சகர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் பேசுகையில், "இப்பிரச்னையில் திரு. சிவசிதம்பரத்தின் கொள்கையை நான் ஆதரிக்கிறேன். சிறுபான்மைத் தமிழர்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கும் பட்சத்தில் சமசமாஜக் கட்சி எதற்கும் தயாராகவுள்ளது. இப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கென விசேஷ கமிட்டியொன்று தெரிவு செய்யப்படவேண்டும்" என்று கூறினர்.

தமிழரசு அபேட்சகர் திரு. க ஜெயக்கொடி பேசுகையில், "தமிழரசுக்கட்சியைப் பொறுத்த வரையில் தீண்டாமை ஒழிப்புக்கு மிக முக்கியத்துவம் கொடுத்துள்ளது. யாழ்ப்பாணத்திலே தீண்டாமை ஒழிப்பு நடைபெற்றதையும் நல்லூர் கந்தசாமி கோயில் திறந்து விடப்பட்டதையும் பொது மக்கள் நன்கு அறிவார்கள். நெல்லியடிப் பட்டினசபையை பொறுத்த வரையிலும் பிரச்னைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட கிணறு பொதுக்கிணறு இல்லையானால் புதிய கிணறு வெட்டப்பட வேண்டும். பொதுக் கிணறுதானென்ருல் உடனடியாகவே அதனைச் சிறுபான்மைத் தமிழரின் பிரவேசத்திற்கு விட நம்மால் முடியும். தேனீர்க்கடைகளைப் பொறுத்த வரையில் முதலாளிகளுடன் ஒற்றுமையான முறையில் பேசி முயற்சிக்கிறோம், எல்லோரும் மனமொத்துக் கிடைக்கும் உரிமை நீடித்து நிலைக்கும், அதனுல் பயனுண்டு. ஒற்றுமையில் கிடைப்பதுதான் பெரும் வெற்றி. இவ் வெற்றியை நம்மால் நிச்சயமாகப் பெற்றுத்தர முடியும்" என்று கூறினர்.

திரு. கே. டானியல் பேசுகையில், "இதற்கென ஒரு குழு நியமிக்கப்பட்டு அக்குழுவின் மூலம் பட்டின சபைக்குச் சமர்ப்பிக்கப்படும் அறிக்கை அங்கு ஆராயப்பட்டு சட்டமாக்கப் பட்டவுடன் எல்லோரும் மனமொத்த முறையில் செய்வது தான் உசிதமானது" என்று குறிப்பிட்டார்.

திருவாளர்கள் வி. ஏ. கந்தசாமி. மெய்யரசன் ஆகியோரும் பேசினர்.

விசேஷ நிர்வாகக் கமிட்டியில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

திருவாளர்கள் மு. சிவசிதம்பரம், க. ஜெயக்கொடி, ஆர். ஆர். தர்மரத்தினம் (அபேட்சகர்கள்) பட்டின சபை அங்கத்தவர் வெற்றிவேலு, சிறுபான்மைத் தமிழர் மகாசபைச் செயலாளர் திரு எஸ். செல்லையா, யாழ் பிரதேச கம்யூனிஸ்ட் தலைவர் திரு. வி. ஏ. கந்தசாமி, அட்வக்கேட் எஸ. ஜெயசிங்கம், கே. டானியல். அ. [illegible] [illegible] கமணி தலைமைவகித்தார்.

## வானொலி நிகழ்ச்சிகள்
### கொழும்பு
### வியாழன் 18-2-65

(செய்திகள்: காலை 7-15, பகல் 13-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதய கீதம். 6 50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 துதிப் பாடல்கள், 7-30 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்,

பகல் 12-00 திரை கானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 குழந்தைகள் சந்திப்பு. 5-45 திரை இசை,

இரவு 6-15 கிராம சஞ்சிகை, 5-45 சங்கீத வகுப்பு, 7-03 பேச்சு, 7-15 வயலின்—எஸ். இரத்தினசபாபதி, 7-45 'லண்டன் கந்தையா', 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்திய மெல்லிசை, 9-30 நேயர் விருப்பம், 10-00 நிலைய ஒலிப்பதிவுகள்.

# "இவ்வாண்டு காணிவரியை அறவிடாதீர்கள்"
## யாழ் அரசாங்க அதிபருக்கு குடியேற்ற வாசிகள் மகஜர்

யாழ்ப்பாணம், வியாழன்

1964, 65-ம் ஆண்டுகளுக்கான அரசாங்க காணி வரிப்பணத்தை தம்மிடம் அறவிட வேண்டாமென உருத்திரபுரம் குடியேற்றவாசிகள் வட பகுதி அரசாங்க அதிபர் திரு. என். டி. ஜயவீராவுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் கேட்டுள்ளார்கள்.

உருத்திரபுரம் குடியேற்ற வாசிகளில் நூற்றுக்குமதிகமானோர் கையொப்பமிட்டு அரசாங்க அதிபருக்கு அனுப்பியுள்ள மகஜரில் குறிப்பிட்டிருப்பதாவது:-

"உருத்திரபுரம் குடியேற்ற வாசிகளுக்கு வழங்கப்பட்டுள்ள குடியேற்றக்காணியில் 4 ஏக்கர் நீர்ப்பாசனக் காணி என்பதும், 3 ஏக்கர் குடியிருப்புக் காணியான மேட்டுக் காணி என்பதும் குறிப்பிடத்தக்கது.

நீர்ப்பாசனக் காணியான வயற்காணியில் தற்பொழுது 64/65 ஆண்டுக்கால போகம் நெல் வேளாண்மை மழையில்லாமை காரணமாவும் இரணைமடுக்குளத்தில் தண்ணீர் இல்லாமை காரணமாகவும் பயனில்லாமற்போய்விட்டது. இதனுல் இப்போக வேளாண்மையிலிருந்து ஒரு புசல் நெல்லைக் கூட எதிர்பார்க்க முடியாத நிலையில் இருக்கின்றோம்,

3 ஏக்கர் காணியான குடியிருப்புக்காணிகளில் 1964-65 காலபோகம் மழையை மாத்திரம் நம்பி விதைக்கப்பட்ட நெற்பயிர்கள் மழையின்மை காரணமாக முற்றுக அழிந்து விட்டன,

1964 சிறுபோகம் எமது வயல்காணிகளில் அரைவாசியான 2 ஏக்கரே விதைப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டது. இச்சிறுபோக வேளாண்மை இரணைமடுக் குளத்தில் தண்ணீர் பற்றுக்குறை காரணமாகவும் நாம் பலகை அடித்து விதைக்க முடியாத நிலையில் புழுதிவிதைப்புச் செய்தோம். இவ்விதம் புழுதி விதைப்புச் செய்த பொழுது சிறுமழையொன்று பெய்து நெற்பயிர்கள் முளைத்தன. முளைத்து ஒரு மாதத்திற்கு மேற்கொண்டு மழையின்மையாலும் தண்ணீர் தரப்படாமலும் இருந்தமையால் இச்சிறுபோகப் பயிர்கள் சிறு பயிரிலேயே அதிகமாக எரிந்துபோய் விட்டன. பின்னும் இச்சிறுபோகத்தில் எமக்கு பங்கீடு செய்யப்பட்ட தண்ணீர் நெற்பயிரின் தேவைக்குப் போதியதாய் இல்லாமலிருந்தது. இக்காரணங்களால் மேற்படி எமது 1964 சிறுபோகமும் மத்திய பலனையே தந்தது.

இவ்விதமான பல காரணங்களால் பஞ்சத்திலே வேதனைப்பட்டுக் கொண்டிருந்த எம் மத்தியில் எழுந்து வீசியபுயல் காற்று எமது வீட்டுக் காணிகளிலுள்ள பிரயோசனப் பயிர்களை முற்றுக அழித்ததோடு ஒவ்வொரு வீட்டிலுமே ஓடுகள் புயலால் தூக்கி வீசப்பட்டன. சிலரது வீடுகள் முற்றுகக் கவிழ்ந்து அவதிப்படுகிருர்கள் மேலே கூறிய பல காரணங்களால் பலவற்றையும் இழந்திருந்த நாம் இப்புயலிடம் எஞ்சியிருந்த சொத்துக்களையும் இழந்து விட்டோம்.

வருமானம் எதையாவது நாடி வளவுக்காணிகளில்தோட்டப்பயிர் எதையும் செய்வதற்கு முயற்சிக்கவும் முடியாத நிலையில் கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் வருந்துகிறோம்.

வேளாண்மையை நம்பியிருந்த எம்மிடம் தற்போது வருமானம் எதுவும் கிடையாது. பல பல குழந்தைகளோடு சீவியத்திற்கே கஷ்டப்படுகிறோம், இந்த நிலையில் நாம் அரசாங்கத்திற்கு வரிப்பணங்கள் செலுத்துவதென்பது முடியவே முடியாதவொன்ருய் உள்ளது. எனவே 1964-ம் ஆண்டுக்கும் 1965-ம் ஆண்டுக்குமான இருவருட வரிப்பணத்தை இல்லாமல் செய்துதரும்படி மிக மிக மன்ருடி வேண்டுகிறோம்.


REGAL — JAFFNA
NOW SHOWING
Chuck Connors–KamalaDevi
in
GERONIMO
(Panavision — Techni color)

ராஜா சினிமா (சுழிபுரம்)
சிவாஜி - தேவிகா
நடிக்கும்
அன்னை இல்லம்

மனோகரா (யாழ்ப்பாணம்) (போன்: 485
எம். ஜி. ராமச்சந்திரன்
சரோஜாதேவி (நடித்த)
மாடப்புரு
தினசரி 6-30, 9-30,
சனி, ஞாயிறு
2-30, 6-30, 9-30.

6-வது வெற்றி வாரம்!
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்: மாலை 2-30, இரவு 6-30, 9-30
சனி, ஞாயிறு 4 காட்சிகள்:
காலை 10-30, மாலை 2-30, இரவு 6-30, 9-30

சிவாஜி கணேசன் - சாவித்திரி
மற்றும் பலர் நடித்த
கர்ணன்

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
மற்றும் 6 சினிமாஸ் திரைகளில்
ஜெமினி கணேசன் - சாவித்திரி
நடித்த
கற்பகம்


### தேவை

1. தெல்லிப்பளை கிழக்கு,பலநோக்கக் கூட்டுறவுச் சங்கக் கிளை ஸ்தாபனத்திற்கு மனேசரும் விற்பனையாளரும் தேவை,

2. கூட்டுறவுப் பயிற்சிசாலையில் பயிற்சிபெற்றவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம் வயது (25க்கும் 35க்கும்உட்பட)

3. பிணைப்பணம் ரூபா 1000/- (ரொக்கப்பணம்) ஆதனப் பிணை: ரூபா 2000/-

4. மனேச்சரின் பொறுப்பிலேயே விற்பனையாளரும் நியமிக்கப்படும், இருவருக்கும் உட்பட எல்லா வேதனங்களும் சேர்த்து மாதம் ரூபா 160-00. ஆறு மாதத்திற்குப் பின் வளர்ச்சியைப் பார்த்து சம்பள உயர்வு கொடுக்கப்படும்.

5. 22-2-65 திகதிக்குமுன் விண்ணப்பங்கள் தெல்லிப்பளை கிழக்கு பலநோக்கக் கூட்டுறவுச்சங்க கௌரவகாரியதரிசி என்ற விலாசத்திற்கு இருநற் சாட்சிப்பத்திரங்களுடன் எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும்.

மு. தில்லைநடராசா
1620 கௌரவ காரியதரிசி,

வரி விளம்பரம்

### Available

Bull Dozer available on hire at Akkarayankulam C Vivekanandan, Valvettithurai. 1590

### தேவை

அச்சுவேலி சிவகுமரன் அச்சகத்தில் வேலைசெய்ய அச்சுக் கோர்ப்பவர்களும் மெஷின் மைண்டர்களும் உடன்தேவை. விண்ணப்பிக்கவும், க. சிவபாதம், அச்சுவேலி. 1591

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம். மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இலும், தொய்வுக்கு 10 நாள் மருந்து. 12-50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10-50.

வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## சுங்க இலாகாவில் திருட்டு குறைவு

மாவிட்டபுரம், புதன்

யாழ்ப்பாணம் சுங்க இலாகாவில் அனுமதிச்சீட்டின்றி எவரும் நுழைய முடியாத நிலை ஏற்படுத்தப்பட்டபின் திருட்டுக்கள் குறைந்திருப்பதாகத் தெரிகிறது.

சுங்க இலாகாவில் வேலை செய்பவர்கள், கப்பலில் வேலை செய்பவர்கள், வத்தைக்காரர்கள் ஆகியோர் தமது அனுமதிப் பத்திரமின்றி நுழைய அனுமதிக்கப்படுவதில்லை. தற்போது மாவுக்கப்பல் ஒன்று வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடபகுதி அசைஸ்

# "நான் நிலத்தில் விழுந்தபின்பும் 4-ம் எதிரி வெட்டினர்"

## நல்லூர் கொலை முயற்சி வழக்கில் காயமடைந்தவர் சாட்சியம்

யாழ்ப்பாணம், வியாழன்

'நான் நிலத்தில் விழுந்த பின்பும் 4-ம் எதிரி என் தலையில் மாறிமாறி வெட்டினர். வாருங்கள் எல்லாரும் போவோம் என்று 1-ம், 2-ம் எதிரிகள் கூறியபொழுது 3-ம் எதிரி எனது மூக்கில் கை வைத்துப் பார்த்து விட்டு எனது நெஞ்சில் ஏறி மிதித்த பின் சென்றார்.'

நல்லூர்கொலை முயற்சிவழக்கு வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராஜாவின்முன்னிலையில் முதலாவது வழக்காக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது காயமடைந்தவரான நடராசாசாட்சியமளிக்கும்போது மேற் கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கில் நல்லூரைச் சேர்ந்த கந்தையா நடராசா என்பவரை 63-ம் ஆண்டு மே மாதம் 4-ம் திகதி தெய்வேந்திரன் துரைசிங்கம், கந்தசாமி, நவரத்தினம் ஆகியோர் கத்தியால் வெட்டிக் கொலை செய்ய முயற்சித்ததாகவும் அதே இடத்தில், அதேநேரத்தில் கந்தசாமியின் 150 ரூபா பெறுமதியான கைக்கடிகாரத்தைக் கொள்ளையடித்ததாகவும், அதேஇடத்தில், அதே நேரத்தில் கைக்கடிகாரத்தை கொள்ளையடிக்கும்போது நடராசாவிற்குக் காயம் ஏற்படுத்தியதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு கே வி எஸ் சண்முகநாதன், திருவாளர்கள் கோபாலரத்தினத்தின் உதவியுடனும் திருவாளர்கள் பாலக்குமார், விஸ்வநாதன் ஆகியோரின் அனுசரணையுடனும் ஆஜரானர்.

### பேசாமல் இருந்தேன்

நடராசா தொடர்ந்து சாட்சியமளித்தபோது கூறியதாவது: சம்பவம் நடந்ததினம் நானும் வேறுசிலரும் கைலாய பிள்ளையார் கோவிலடியில் இருந்தோம். 4-ம் எதிரி வந்து காரை தள்ளிவிடும்படி கேட்டார். நான் காரை தள்ளிய பின் என்னைக் காரில் வரும்படியும் வீட்டில் இறக்கிவிடுவதாகவும் கூறினர்கள். நான் காரில் ஏறினேன். பின்னுக்கு முதல் மூன்று எதிரிகளும் இருந்தார்கள். கார் எனது வீட்டைத் தாண்டி பருத்தித்துறை வீதியால் சென்றது. நான் பேசாமலிருந்தேன. கார் வல்லை வெளிப்பாலத்தில் நின்றது.

### கையைக் கடித்தார்

1-ம், 2-ம், 3-ம் எதிரிகள் தகாத வார்த்தைகளால் என்னைபேசிகாரிலிருந்து இறங்கும்படி கூறினர்கள். நான் காரினல் இறங்கியதும் 1-ம் எதிரி என் கையைப்பிடித்து இழுத்துச் சென்றார். தனது பெனியனுக்குள்ளிருந்து ஒரு பெரிய கத்தியை எடுத்து என்னை வெட்ட ஓங்கிய போது நான் அவரின் கையை பிடித்தேன். நான் அடித்த பொழுது அவர் கீழேவிழுந்து விட்டார். நான் கத்தியை எடுக்க முற்பட்டபோது எனது கையைக் கடித்தார். பின் சத்தம் போட்டு மற்றவர்களையும் கூப்பிட்டார். 2-ம் எதிரி இரும்புக் கம்பியால் எனது தலையில் அடித்தார். 4-ம்எதிரி முழங்காலில் கத்தியால் வெட்டினர். 1-ம் எதிரி கத்தியால் எனது கழுத்தை நோக்கி வெட்ட நான் கையைக் கொடுத்தேன். 3-ம் எதிரி வயிறினுல் என் உடம்பெல்லாம் அடித்தார். 2-ம் எதிரி எனது கைக்கடிகாரத்தைப் பிடுங்கி எடுத்தார். நான் நிலத்தில் விழுந்த பின்பும் 4-ம் எதிரி என் தலையில் மாறிமாறி வெட்டினர்.

அவர்கள் போனபின் நான் ரோட்டுக்குப் போனேன். முதலில் ஒரு சயிக்கிள் வந்தது. அதன்பின் ஒருகார் வந்தது. நான் காரை மறித்ததும் காரிலிருந்து புரக்டர் குணரத்தினம் இறங்கி வந்தார். அவரிடம் நடந்தவற்றைக் கூறினேன். சம்பவம் நடந்தபோது அவரை எனக்கு யார் என்று தெரியாது. அவர் என்னை தனது காரில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றார்.

வழக்கறிஞர் திரு. கே. வி. எஸ. சண்முகநாதன் குறுக்கு விசாரணைசெய்தபோது சாட்சி கூறியதாவது: "பொலிஸ வாக்குமூலத்தில் 4 எதிரிகளும் தாக்கினர்களென கூறினேன். 4 எதிரிகளின் பெயர்களையும் பொலிசாருக்கு கூறினேன்."

வழ- 3ம் எதிரியின் பெயரை நீர் பொலிசுக்கு கூறவில்லை?-கூறினேன். சைக்கிளில் வந்தவருக்கு எதிரிகளின் பெயரைக் கூறி பொலிசாருக்கு அறிவிக்கும்படி தெரிவித்தேன், புரக்டர் குணரத்தினத்திற்கும் 4 எதிரிகளின் பெயரையும் கூறினேன்.

வழ- 1ம் எதிரிக்கும் உமக்கும் ஏதாவது மனஸதாபமுண்டா?-இல்லை.

வழ- 2ம் எதிரிக்கும் உமக்கும் ஏதாவது மனஸதாபமுண்டா?-இல்லை

வழ- 3ம் எதிரிக்கும் உமக்கும் ஏதாவது மனஸதாபமுண்டா?-இல்லை.

வழ- 4ம் எதிரிக்கும் உமக்கும் ஏதாவது மனஸதாபமுண்டா?-இல்லை.

வழ- சம்பவம் நடந்ததினம் நீர் மதுபானம் பாவித்தீரா? -இல்லை,

வழ- உமது சகோதரரும் அன்றுதாக்கப்பட்டாரா?-தாக்கப்பட்டாரென்று எனது தகப்பனர் கூறினர்.

வழ- நீரும உமது சகோதரரும் ஒரு பெண்ணைத் தேடி உடுப்பிட்டிக்குப் போனீர்கள் என்று கூறுகிறேன்?-இல்லை.

வழ- அந்தநேரத்தில் தான் இப்படித் தாக்கப்பட்டீர்கள்? -இல்லை,

வழ- 1ம் எதிரிக்கும் உமது சகோதரனுக்குமிடையில் வழக்கு இருந்ததா?-இல்லை.

வழ- 1ம் எதிரியின் காரில் சம்பவதினத்திற்கு முன் எத்தனைதடவை போனீர்?-நான் கணக்கெடுக்கவில்லை.

விசாரணை இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

---


**தேவை**

நல்ல ஆரோக்கியமும் தேகக் கட்டுமுள்ள காவற்காரர் தேவை. நேரில் மனுச்செய்க, அரஸ்கோ இன்டஸ்ரீஸ், நல்லூர், யாழ்ப்பாணம். 1589



**வைகுந்தவாசனை ஆதரித்து**

**பேர்னுட் சொய்சா M P**

**பீட்டர் கெனமன்**

இன்று வியாழன் 6 மணிக்கு அளவெட்டி கூட்டத்தில் பேசுவார்கள்.


## 'ஈழநாடு' சூறுவளி கஷ்ட நிவாரணநிதி

### சுபாஸ் கபே அதிபர் 101 ரூபா உதவி

'ஈழநாடு' சூறுவளிக் கஷ்ட நிவாரண நிதிக்கு பணமாகவும் பொருளாகவும்25,875 ரூபா 21 சதம் சேர்ந்துள்ளது. யாழ்ப்பாணம் சுபாஸ கபே உரிமையாளர் திரு ஏ. சங்கரன் 101 ரூபா வழிங்கியுள்ளார்.

## தமிழில் மொழிபெயர்க்க உதவி

யாழ்ப்பாணம், புதன்

நல்லூர் கொலை முயற்சி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபொழுது, நீதியரசர் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராசா, எதிரிகளிடம் ஆங்கிலம் தெரியுமா? என்று கேட்ட பொழுது, அவர்கள் ஆங்கிலம் தெரியாதெனறும் தமிழ் மட்டுமே தெரியுமென்றும் கூறினர்கள்.

இதை தொடர்ந்து தமிழ் பாஷையை தவிர ஏனைய பாஷைகளில் நடைபெறும் சாட்சியங்கள், உங்கள் நன்மையைக் கருதி தமிழில் மொழிபெயர்க்கபபடும் என எதிரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது.

## சமயப் பிரசங்கங்கள்

யாழ்ப்பாணம், வியா

19-2-65 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிமுதல் இரவு 8 மணிவரை ஸ்ரீமத் வி. எஸ. எஸ. மணிபாகவதரைத் தலைவராகக்கொண்ட அகில இலங்கைப் பொதுஜன சேவைச் சங்க சமயபபிரசார சபையினரால் பின்வரும் தேவஸதானங்களில் பிரசங்கங்களுக்கு ஒழுங்குசெய்துள்ளனர்.

வண்ணை வைத்தீஸவரன் தேவஸதானம் திரு. த. சுப்பிரமணியம் சிவம்' எனனும் பொருள்பறறியும், நல்லூர் முத்தவிநாயகர் ஆலயம் பண்டிதர் இரா, சிவசுபபிரமணியம 'சிவராத்திரி' எனனும பொருள பற்றியும், வாயனமாககட்டு ஸ்ரீ இராஜேஸவரி அம்பாள் ஆலயத்தில திரு த. சுப்பிரமணியம் 'சிவராத்திரி மகிமை' என்னும் பொருள பறறியும் 23-2-65 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிமுதல் 7 மணிவரை திரு. சுப்பிரமணியம் நல்லூர் சிவன் தேவஸதானத்தில் 'சிவவழிபாடு' பற்றியும் பேசுவார்கள்.

## ஐயாறன்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

அதிக பங்கெடுத்தாராம். முதல் நாள் நல்லூர் கைலாச பிள்ளையார் கோவிலையும் ஹரிஜனங்களுக்குத் திறக்க, அங்கு கோவிலைச் சுற்றி வசிக்கும் மக்களிடம் வீடுவீடாகச் சென்று நீதி அரசர் கேட்டதாயும், அவர்களது அனுமதியைப பெற்று, ஈழத்து சைவ சரித்திரத்திலே புதிய சகாப்தத்தை ஆரம்பித்ததாக, அச்சமயம் கச்சேரியில் வேலை செய்தவரும் இப்போது ஓய்வு பெற்று, நலலூர் முருகன் கோவில் தொண்டர்படைத் தலைவராகவுமுள்ள அன்பர் ஆதிரத்னம் தெரிவித்தார். இவைவையலலாம் பொன்னெழுத்துக்களால் பொறிக்க வேண்டிய விஷயமல்லவா?

* * *

விருத்தனே வேலை விட்முண்ட கண்டா விரிசடைமேல் வெண்திங்கள் விளங்கச் சூடும், ஒருத்தனே உமைகணவா உலகமூர்த்தி நுந்தாதவொண் சுடரே அடியார் தங்கள், பொருத்தனே யென்றென்று புலம்பி நாளும் புலனைந்தும் அகத்தடக்கிப் புலம்பி நோக்கிக், கருதிறல் தொழுமடியார் [illegible]

—அப்பர் சுவாமிகள்

# கைத்தொழில் பொருட்காட்சியில் "திருவாளர் 10 லட்சம்"

## பல பரிசுகள் அளிக்க ஏற்பாடு

கொழும்பு, புதன்

கொழும்பு கைத்தொழில் பொருட்காட்சியைப் பார்வையிட வரும் 10 லட்ச இலக்க டிக்கட்டைப் பெறும் நபர் பிரபலஸ்தரைப் போல் அங்கு வரவேற்கப்படுவார், அநேகமாக நாளை அல்லது மறுதினம் இந்த இலக்க டிக்கட்டைப் பெறும் நபர் பொருட்காட்சிக்கு வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

"திரு 10 லட்சம்" பொருட்காட்சி அதிபரால் வரவேற்கப்படுவார். காட்சியின் எல்லாப் பகுதிகளுக்கும் பொருட்காட்சி அதிபர் தாமே அவரை அழைத்துச் சென்று காட்டுவார்

பல காட்சி மண்டபங்களும் அவருக்கு ஏராளமான பரிசுகளை வழங்கும், பொருட்காட்சி அதிகாரிகளும் பல பரிசுகளை வழங்குவர்.

"திருவாளர் 10 லட்சமாக பிரபலத்தையும் பரிசுகளையும் பெறும் போட்டியில் நாளை முதல் பலர் முயற்சிமேற்கொள்வார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது

## அலீஸ் வழக்கு

### பிரிவிகவுன்சில் விளக்கம்

லண்டன், பெப், 17

ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஜனப் ஏ. அலீஸ பிரிவிகவுன்சிலுக்கு செய்துகொண்ட மனு ஏற்றுக் கொள்ளப்பட்டு அவர்மீது சுமத்தப்பட்டிருந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதற்கான காரணத்தை பிரிவிகவுன்சிலின் நீதிபரிபாலன கமிட்டி தெரிவித்துள்ளது.

பிரிவிகவுன்சிலின் தீர்ப்பை வைக்கவுண்ட் டில்ஹோர்ன் தெரிவிக்கையில பெப்ரவரி 4-ம் திகதி ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்த அங்கத்தவர்கள் தோட்டத்துக்குள் அத்துமீறிச் சென்றார்களென்றாலும் தோட்ட சுப்ரின்டனைத் தாக்குவதற்குத்தான் இவர்கள் இவவாறு சென்றார்கள் என்பதற்கு போதிய ஆதாரமில்லை என்றும் வேலைநிறுத்தம் செய்துகொண்டிருந்தவர்களைத் சந்திக்கும் நோக்கத்துடன் இவர்கள் சென்றார்கள் என எண்ணுவதற்கு இடமுண்டு என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## ஒட்டிப்பிறந்த ஆட்டுக்குட்டி

யாழ்ப்பாணம், புதன்

இரண்டு ஆட்டுக்குட்டிகள் ஒட்டிப் பிறந்த சம்பவம் ஒன்று கோண்டாவிலைச் சேர்ந்த திரு ஆசீர்வாதம் வீட்டில் நடைபெற்றுள்ளது. இந்த விசித்திர ஒட்டிப் பிறந்த ஆடு பிறந்த சில நிமிடங்களுக்குள் இறந்துவிட்டது. இந்த ஆட்டிற்கு ஒரு தலையும், நான்கு செவிகளும், எட்டு கால்களும் இருந்தன. இறந்த பின்னர் அனேக மக்கள் இந்த ஆட்டைச் சென்று பார்வையிட்டனர்.

## விவியனுக்கு தேநீர் விருந்து

யாழ்ப்பாணம், வியாழன்

கலாசார உதவி மந்திரி திருமதி விவியன் குணவர்த்தன, கொழும்பு தெற்குத் தொகுதியில் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ள திரு. பெர்ஞட் சொய்சா ஆகியோருக்கு நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் வண்ணார்பண்ணை வாக்காளரால் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது.

## முருகவழிபாட்டிற்கு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேஜர் பக்கீர் தலைமையில் பொலிசார் அணிவகுப்பு மரியாதை செலுத்தினர்.

நீதியரசர் தமது ஆசனத்தில் அமர்ந்ததும், இம்முறை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கும் வழக்குகளின் பத்திரங்களை வடபகுதி பிஸ்கால் அதிகாரியான திரு. நெவில் ஜெயவீரா சமர்ப்பித்தார். நீதியரசருக்கருகில், யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி, திரு. எம். ராஜரத்தினம், யாழ்ப்பாணம் கூட்டுமாவட்ட நீதிபதி திரு. ஜி சி நைல்ஸ், மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. அத்துலுபாவு, யாழ்ப்பாண மாஜிஸ்டிரேட திரு ரி ஜே ராஜரத்தினம், கொழும்பு மாவட்ட கூட்டு நீதிபதி திரு எஸ், தம்பித்துரை, வடபகுதி பிஸ்கால் அதிகாரி திரு. நெவில் ஜெயவீரா ஆகியோர் அமர்ந்திருந்தனர்.

நீதிமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் பெருந்திரளான மக்கள் திரண்டிருந்தனர்.

## மன்னரில் நிலவள நீர்வள ஆராய்ச்சி

கொழும்பு, புதன்

மன்னர் பகுதியில் போதிய அளவிற்கு தோடை, எலுமிச்சைப் போன்ற மரங்களைப் பயிரிடுவதற்கு பூமியின் கீழ் தண்ணீர் இருக்கின்றதா என்பதை ஆராய்வதற்காக இஸரேல் நிபுணர் டாக்டர் அரோன் அராட் மன்னருக்குச் சென்றுள்ளார். இந்த வாரத்தில் இதனை சோதனை செய்து பார்ப்பதற்காக நிலத்தைத் துளைத்து ஆராய்ச்சி வேலை செய்வதில் நிபுணர் கவனம் செலுத்துவார், தோடை, எலுமிச்சை போன்ற மரங்களை வைத்து இரண்டு பெரும் கமங்களை அமைப்பதற்கு முன்னேற்பாடாக இச்சோதனை நடைபெறும். புத்தளத்திற்கு வடக்கேயும் இரணமடு பகுதிகளிலுமே இந்த கமம் அமைக்கப்படவிருக்கின்றது. இலங்கையின் அழைப்பின் பேரில் முன்னர் வந்த மற்றுமொரு இஸ்ரேல் நிபுணர் டாக்டர் மெண்டல் புத்தளத்திற்கு வடக்கேயுள்ள இடம் இந்த முறையில் பயிரிடுவதற்கு சிறந்ததென்று தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். இஸ்ரேல் தேசத்திலிருந்து வந்த மற்ருேர் நிபுணர் திருயாயிர் யாலிப் தான் நடத்திய பூர்வாங்க பரிசீலனையின் பின் இதே அபிப்பிராயத்தை தெரிவித்துள்ளார்.

## தனிப்பட்ட ஆஸ்பத்திரிகள் ஊழியர்

கொழும்பு, புதன்

தனிப்பட்ட வைத்தியசாலைகளில் கடமையாற்றும் சகல உத்தியோகஸ்தர்களும், ஊழியர்களும் கடை கந்தோர் ஊழியர் சட்டத்தின்கீழ் அடங்குவர் என தொழில் கமிஷனர் தெரிவித்துள்ளார். தனிப்பட்ட ஆஸபத்திரி ஒன்று சம்பந்தமான பிணக்கையொட்டி தனிப்பட்ட ஆஸபத்திரியில் கடமையாற்றும் உத்தியோகஸதர்கள் பற்றி தொழில் கமிஷனரிடம் விளக்கம் கோரப்பட்டதைத் தொடர்ந்தே தொழில் கமிஷனர் இவ்விதம் தெரிவித்துள்ளார்.

தொழில் கமிஷனரின் விளக்கம் உரிய முறையில் அமுல் நடத்தப்பட்டால் அதிகமான தனிப்பட்ட ஆஸபத்திரிகளை மூடவேண்டிய நிலை ஏற்படும் என தனிப்பட்ட ஆஸபத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 53-ம் இலக்கத்தில் [illegible] அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு [illegible] மாதம் 18-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org